# கமெண்ட் கந்தர்...

ஆர்ஜென்ரீனாவோட இலங்கை அரசாங்கம் நெருக்கமா இருந்திருந்தா, புட்போல் வெற்றிக்கு அவங்களுக்கு பரிசா கிடைச்ச டொலர்களில கொஞ்சத்த கடனா வாங்கி பிரச்சினைய முடிச்சிருக்கலாம்...




Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 129 சுபகிருது வருடம், மார்கழி மாதம் 05ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (20.12.2022) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் அவ்வல் - 25, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.60




# உதைபந்தாட்ட உலகக்கிண்ணத்தை கைப்பற்றியது ஆர்ஜென்ரீனா

## மெய்ப்பட்டது மெஸ்ஸியின் கனவு

## போராடித் தோற்றது பிரான்ஸ்

(ஏ.அகீல் சிஹாப்)

கட்டாரில் நடைபெற்ற 22ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டியின் இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா 'பெனால்டி ஷூட் அவுட்' வாய்ப்பில் 4-2 என்ற கோல் கணக்கில் பிரான்ஸை வீழ்த்தி சம்பியனானது.

இதன்படி அந்த அணி மூன்றாவது முறையாக உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியிருக்கிறது. ஆர்ஜென்ரீன அணித்தலைவர் லயோனல் மெஸ்ஸிக்கு இது கடைசி உலகக்கிண்ணப் போட்டியாக இருந்த நிலையில், இதில் தனது அணிக்கு கிண்ணத்தை வென்று தந்து வெற்றிகரமான அணித்தலைவராக விலகும் கனவுடன் அவர் இருந்தார். அவரது அந்தக் கனவு நனவானது.



இறுதி ஆட்டத்தில் முதலில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தின் (90 நிமிடங்கள்) முடிவில் இரு அணிகளும் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருக்க, கூடுதல் நேரத்தின் (30 நிமிடம்) நிறைவிலும் 3-3 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமனானது. பின்னர் பெனால்டி ஷூட் அவுட் வாய்ப்பில் ஆர்ஜென்ரீனா 4-2 என்ற கோல் கணக்கில் வென்றது.


10 பக்கம்


# போதை மாத்திரை விற்பனைசெய்த மாணவன் கைது

(நா.தினுஷா)

பாடசாலை மாணவர்களுக்கு போதைப் பொருள் விநியோகித்த கண்டி பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையின் உயர் தரத்தில் கல்வி கற்கும் மாணவரொருவர் உள்ளிட்ட இன்னுமொரு நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.


02 பக்கம்


# காணாமல்போனோருக்கு என்னவாயிற்று?

## முல்லையில் ஓ.எம்.பி. அலுவலகத்தை முற்றுகையிட்டு மக்கள் போராட்டம்

(வன்னி செய்தியாளர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல்போனோருக்கான அலுவலகத்தால் (ஓ.எம்.பி) மேற்கொள்ளப்படவிருந்த பதிவு விசாரணை நடவடிக்கைகளுக்கு முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களால் எதிர்ப்பு வெளியிடப்பட்டு நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் காணாமல்போனோருக்கான அலுவலகத்தால் விசாரணை நடவடிக்கை...




02 பக்கம்


# தினேஷ் கொலையில் துலங்காத மர்மம்

## குற்றவாளி அனுப்பிய குறுஞ்செய்தி குறித்தும் விசாரணை

(கே.சுபானி)

பொரளையில் தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரை படுகொலை செய்த குற்றவாளி கிரிக்கெட் வர்ண னையாளர் பிரையன் தோமஸுக்கு அனுப்பியதாக சந்தேகிக்கப்படும் குறுஞ்செய்தி ...


02 பக்கம்


# போதைப்பொருளுடன் 90 ஆயிரம் பேர் இவ்வாண்டு கைது


02 பக்கம்


# முஸ்லிம்களுக்கான அரசியல் தீர்வு குறித்து எடுத்துக் கூறுங்கள்!

## ஹக்கீமிடம் அமைச்சர் நசீர் அஹமட் கோரிக்கை

(அஷ்ரப் ஏ. சமத்)



வடக்கு, கிழக்கை இணைக்கவேண்டுமென்றால் அந்த மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பதை முஸ்லிம் தலைவர்கள் வெளிப்படையாக எடுத்துக் கூறவேண்டும் என சுற்றாடல் அமைச்சர்...


02 பக்கம்




யாழ்ப்பாணம், வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் படகு உடைந்த நிலையில், மீட்கப்பட்ட மியன்மார் அகதிகள் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு முதலுதவி அளிக்கப்பட்டது.

(படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

# 150 பேருடன் மற்றுமொரு படகு கடலில் மூழ்கியது!

## யாழில் கரைசேர்க்கப்பட்ட மியன்மார் அகதிகள் தகவல்

தம்முடன் புறப்பட்ட மற்றுமொரு அகதிகள் படகு கடலில் மூழ்கிவிட்டதாக யாழ்ப்பாணத்தில் கரைசேர்க்கப்பட்ட மியன்மார் அகதிகள் தெரிவித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மியன்மாரிலிருந்து புறப்பட்ட அகதிகள் படகு ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக பழுதடைந்த நிலையில், கடற்படையினரால் மீட்கப்பட்டது. அதன்பின்னர் அதிலிருந்த 104 பேர் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச்செல்லப்பட்டு முதலுதவிகள் அளிக்கப்பட்டன.

இந்நிலையில் படையினரால் மீட்கப்பட்ட அகதிகள், தம்முடன் மற்றுமொரு அகதிகள் படகு புறப்பட்டதாகவும் அது கடலில் மூழ்கி விட்டதாகவும்...


02 பக்கம்





# உஷ

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய மக்கள் சந்திப்பொன்றுக்கு தயாராகி வருவதாக அவருக்கு நெருக்கமான தகவல்கள் சொல்கின்றன.

தனது ஆட்சிக்காலத்தில் தனக்கு நெருக்கமாக இருந்த சிலருடன் இணைந்தே அவர் இந்த மக்கள் சந்திப்பை நடத்தவுள்ளாராம்.



# அதிகாரப்பகிர்வு சாத்தியமற்றது!

## கூறுகிறார் சம்பிக்க

(நா.தினுஷா)

சமஷ்டி முறையிலான அதிகாரப்பகிர்வு நடைமுறைக்கு சாத்தியமற்றதென 43ஆம் படையணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளதுடன் ...


02 பக்கம்


# இளம் பிக்குவுக்கு விஷம் கொடுத்து கொல்ல முயற்சி

## கண்டியில் சந்தேக நபர் தலைமறைவு


02 பக்கம்


# ஐந்து ஆண்டுகளை நிறைவுசெய்த கிராமசேவகர்களுக்கு இடமாற்றம்

(க.கிருபாகரன்)

கிராம உத்தியோகத்தர் பிரிவு ஒன்றில் 05 ஆண்டுகள் பணி முடித்த அனைத்து கிராம உத்தியோகத்தர்களும் 2023 ஜனவரி 1 முதல் கட்டாயமாக இடமாற்றம் செய்யப்படுவார்களென பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்பிரகாரம் மாவட்ட மற்றும் அமைச்சுகளின் மேன்முறையீடு காரணமாக இடமாற்றம் செய்யப்படாத தற்கு...


02 பக்கம்




# போராட்டத்தில் ஈடுபட்டோர் 'ஐஸ்' பாவனையாளர்கள்

## அமைச்சர் பிரசன்ன குற்றச்சாட்டு

காலிமுகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐஸ் போதைப் பொருளை பயன்படுத்தியிருந்ததாக நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க...


02 பக்கம்

# ராஜபக்ஷக்கள் அனைவரும் சாபத்திலிருந்து தப்ப முடியாது

## பிரகீத் எக்னலிகொடவின் பாரியார் சந்தியா தெரிவிப்பு

சிரேஷ்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவுக்கு அவதூறு இழைக்கப்படுவதாகவும், நீதி கிடைக்கும் வரை தனது சாபத்திலிருந்து ராஜபக்ஷக்களால் ஒரு காலமும் தப்பிக்க முடியாது என்றும் பிரகீத் எக்னலிகொடவின் மனைவி சந்தியா எக்னலிகொட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (19) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரகீத் எக்னலிகொட காணாமலாக்கப்பட்டு இன்றுடன் (நேற்றுடன்) 4,712 நாட்கள் நிறைவடைந்துவிட்டன. பல்வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், அந்த விசாரணைகளில் சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், அந்த விசாரணைகளுக்கு பதிலாக பிரகீத் இன்னுமொரு நாட்டில் இருக்கிறார் என்ற அவதூறே கிடைக்கிறது.

அரச அதிகாரிகள், அமைச்சர்கள், கலைஞர்கள், சட்டத்தை நன்கறிந்த மொஹான் பீரிஸ் போன்றோர் பிரகீத் இருக்குமிடம் கடவுளுக்கே தெரியும் என்றார்கள். பிரகீத் குழுவொன்றினால் கடத்தப்பட்டுச் சென்றதாக தகவல் இருப்பதாக பாதுகாப்புப் பிரிவினர் குறிப்பிடுகின்றனர். பிரகீத் டுபாயில் இருப்பதாகவும், அது தனக்கு தெரியும் என்றும் அங்கிருக்கும் ஒருவர் கூறியதாகவும் கலைஞர் ஒருவர் கூறுகிறார். உண்மையைத் தெரிந்து கொண்டே அனைவரும் இவ்வாறு அவதூறு செய்கிறார்கள்.

அதற்குக் காரணம், இவர்கள் அனைவரும் ராஜபக்ஷக்களுக்கு ஆதரவானவர்கள் என்பதாலாகும். பிரகீத் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பளிக்கப்பட்டன. அதன் பின்னரே, குற்றவியல் திணைக்களத்திலிருந்த திறமை வாய்ந்த அதிகாரிகளின் அர்ப்பணிப்பினால் காரணங்களும், இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தொடர்பான உண்மையான தகவல்களும் புலப்பட்டன. அவர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனக்கு எவ்வளவு முன்னேற்றமும் வரவேற்பும் கிடைத்தாலும் எனக்கான நீதி கிடைக்கும் வரை, எனது சாபத்திலிருந்து ராஜபக்ஷக்களால் ஒரு காலமும் தப்பிக்க முடியாது என்றார்.

### காணாமல்போனோருக்கு...

இடம்பெறுவதற்காக காணாமல் போனோருக்கான அலுவலகத்தின் ஆணையாளர்கள் மூன்று பேர் மற்றும் அதன் அலுவலக உத்தியோகத்தர்கள் வருகை தந்து பதிவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில் மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுகூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் விசாரணை நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

ஓ.எம்.பி. அலுவலகம் ஒரு கண்துடைப்பு நாடகம், எங்களை ஏமாற்ற இவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள வேண்டாம், இழப்பீடோ நட்டஈடோ எமக்கு வேண்டாம், முறையான நீதி விசாரணையே வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதனையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களோடு போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு வருகை தந்து கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்த ஓ.எம்.பி. அலுவலக ஆணையாளர்கள் பதிவு நடவடிக்கைகள் பூர்த்தி செய்ய வேண்டும். அதன் பின்னர் விசாரணைகள் மேற்கொள்ள வேண்டும். ஆகவே, இன்றைய பதிவு நடவடிக்கையில் கலந்துகொண்டு உங்கள் தகவல்களை வழங்கி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுகொண்டனர்.

இதற்கு எதிர்ப்பு வெளியிட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ''எத்தனை தடவை பதிவுகளை விசாரணைகளை எத்தனை ஆணைக்குழுக்களிடம் முன்வைத்துள்ளோம். எல்லாமே ஏமாற்று வேலை. ஆகவே, இவ்வாறு பதிவு நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம்'' என்று கேட்டுக்கொண்டனர் . அதன் பின்னர் தாம் பதிவு நடவடிக்கை விசாரணை என்பனவற்றை நிறுத்துவதாக தெரிவித்த ஓ.எம்.பி. அலுவலக ஊழியர்கள் மீண்டும் மாவட்ட செயலகத்துக்குள் சென்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களிடம் காணாமல் போனோர் அலுவலகத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக கடந்த வாரம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பலருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று , புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், துணுக்காய், மாந்தை கிழக்கு உள்ளிட்ட ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளை சேர்ந்த 244 பேருக்கே இவ்வாறு விசாரணைக்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

இதேவேளை, போராட்டம் இடம்பெற்று கொண்டிருந்த வேளை 20 க்கும் மேற்பட்ட புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸார் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை புகைப்படம் எடுத்ததுடன், கண்காணிப்பிலும் ஈடுபட்டிருந்தனர்.

### இளம் பிக்குவுக்கு...

*(நா.தினுஷா)*

மல்வத்து மகா விகாரைக்கு சொந்தமான கண்டி வரலாற்று சிறப்புமிக்க ஹிந்தகல ரஜமகா விகாரையிலுள்ள 17 வயதுடைய பிக்கு ஒருவருக்கு, விகாரை பூமியில் வைத்து பலவந்தமாக விஷத்தை கொடுத்து பெருந்தொகை பெரசிட்டமோல் மாத்திரைகளை உட்கொள்ள வைத்த சம்பவம் நேற்று முன்தினம் (18) பதிவாகியுள்ளது.

இதன் காரணமாக குறித்த பிக்கு கடுமையாக உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சிகிச்சைக்காக பேராதேனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருவதாகவும் சந்தேகநபர் இதுவரையில் கைதுசெய்யப்படவில்லை என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (19) தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

விகாரைக்கு அருகிலுள்ள ஓடையொன்றின் பக்கத்தில் விஷ போத்தலுடன் காத்திருந்த இனந்தெரியாத நபரொருவர், அதனை அருந்துமாறு குறித்த பிக்குவிடம் கோரியுள்ளார். அதனை தொடர்ந்து விகாரையில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என்றம் குறித்த இடத்திலிருந்து செல்லுமாறு அறிவித்துவிட்டு அங்கிருந்து பிக்கு புறப்பட ஆயத்தமாகியுள்ளார். அதன்போது, அந்தநபர் பிக்குவின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி விஷத்தை பலவந்தமாக்கி உட்கொள்ள வைத்துள்ளமை தற்போதுவரையில் முன்னெடுக்கப்பட்டு விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் குறித்த விகாரைக்கு வந்த இனந்தெரியாத நபரே பிக்குக்கு விஷம் கொடுத்துள்ளதாக ஹிந்தகல ரஜமகா விகாரையிலுள்ள எம்பல் மீகம பஞ்ஞாகித்தி தேரர் தெரிவித்துள்ளார்.

குறித்த விஷ போத்தலை வைத்தியசாலையில் ஒப்படைக்க விகாரையை சேரந்த தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

பலவந்தமாக விஷத்தை உட்கொள்ள வைக்க முயற்சித்ததால் பிக்குவின் முகத்தில் காயம் ஏற்பட்டுள்ளது. குறித்த பிக்கு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது மயக்க நிலையில் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுதொடர்பில் பேராதேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### போதை மாத்திரை...

சந்தேகநபரான குறித்த மாணவனிடமிருந்து 45 ஆயிரம் ரூபா பெறுமதியான 288 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், இந்த போதை மாத்திரைகளை விற்பனை செய்ததனூடாக குறித்த மாணவர் 15 ஆயிரத்து 680 ரூபா உழைத்துள்ளதாக பொலிஸார் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தேகநபர்களிடமிருந்து 'ஐஸ்' போதைப்பொருள் பயன்பாட்டுக்கு உபயோகிக்கப்படும் பொருட்களும் கைபற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் கண்டி பிரதேசத்திலுள்ள பிரபல பாடசாலையில், உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவர் என்பதுடன், மற்றையவர் அண்மையில் பாடசாலைக் கல்வியை முடித்துக்கொண்டவர் என்பதும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

### போதைப்பொருளுடன்...

(நா.தினுஷா)

நடப்பாண்டின் இதுவரையான காலப்பகுதியில் ஹெரோயின், ஐஸ் மற்றும் வேறு சில போதைப்பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் 90 ஆயிரம் பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் கடந்த 2021ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 8 ஆயிரத்து 852 பேர் கைதுசெய்யப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்த வருடத்தில், ஆயிரத்து 427 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் 44 ஆயிரத்து 995 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 9 ஆயிரத்து 897 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருளுடன் 33 ஆயிரத்து 01 சந்தேகநபர்களும், 370 கிலோ கிராம் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் 26 பேரும், 39 கிலோ கிராம் ஹசீஸ் போதைப்பொருளுடன் 55 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

10 ஆயிரத்து 164 பேர் ஐஸ் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேலும், 322 பேரிடமிருந்து ஒரு இலட்சத்து ஆயிரத்து 36 மருந்துப் பொருட்களுடன் 98 ஆயிரத்து 888 போதை மாத்திரைகளும் கைபற்றப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### போராட்டத்தில்...

குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

மினுவங்கொடை நகரில் இடம்பெற்ற நிகழ்வின்போது உரையாற்றிய அமைச்சர் காலி முகத்திடல் போராட்டம் ஜனநாயகமானது அல்லவெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கஞ்சா, ஐஸ் போதைப்பொருள் வர்த்தகர்கள் அவற்றை விற்பனைசெய்துகொள்வதற்காக போராட்டக்களத்தை பயன்படுத்திக்கொண்டனர். அரசியல்வாதிகளும் தங்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்காக போராட்டத்தை கீழ்த்தரமான முறையில் உபயோகித்துக் கொண்டனர்.

போராட்டக்காரர்கள் இன்று உண்மையை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

அந்தப் போராட்டம் ஜனநாயகமானதல்ல. அப்பாவி மக்களின் வீடுகளை எரிப்பதா ஜனநாயகம்? போராட்டத்தால் இழப்புகளே அதிகம் என அவர் தெரிவித்துள்ளார்.

# ஐஸ் போதையால் மாணவர்களின் மனநிலை பாதிப்படையும் ஆபத்து

## வைத்திய நிபுணர் தீபால் பெரேரா எச்சரிக்கை

ஐஸ் போதைப்பொருள் உட்கொள்ளும் மாணவர்களின் மனநிலை முற்றாக பாதிக்கப்படுவதாக கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து டொக்டர் தீபால் பெரோரா மேலும் தெரிவிக்கையில்,

ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு உணவின் மீது வெறுப்பு ஏற்பட்டு, உணவின் மீதான நாட்டம் படிப்படியாகக் குறைந்து உணவைத் தவிர்ப்பதால் உடல்நிலை பலவீனமடைவதுடன், நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்து பல்வேறு நோய்களுக்கு உள்ளாகின்றனர்.

இதனால் மாணவர்களின் உடல்நலம் மற்றும் மனவலிமையை இழப்பதுடன், கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடமுடியாமல் போகின்றது. ஆகவே, குழந்தைகள் தொடர்பில் பெற்றோர் மிகுந்த அவதானத்துடன் இருக்கவேண்டும்.

ஏனைய போதைப்பொருட்களுடன் ஒப்பிடுகையில் ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையாவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

ஐஸ் போதைக்பொருள் உட்கொள்வோரின் ஆயுட்காலமும் குறைவடையும்.

''ஐஸ் போதைப்பொருளை பயன்படுத்துவதால் உறக்கம் வராது, ஞாபக சக்தி அதிகரிக்கும்'' என பொய்யான வார்த்தைகளைக் கூறி பாடசாலை மாணவர்களிடையே ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்துவருகின்றனர்.

ஆனால், ஐஸ் போதைப்பொருள் பாவனையால் மாணவர்கள் ஞாபகசக்தியை இழந்துவருகின்றனர் - என்றார்.

### அதிகாரப்பகிர்வு...

சிறையிலிருக்கும் முன்னாள் புலி உறுப்பினர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

யுத்த காலத்தில் தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டிருந்தால் அவற்றை மீண்டும் அவர்களுக்கே பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதுடன், வனப் பாதுகாப்பு மற்றும் தொல்பொருள் நிலங்களை கோருவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டி பிரதேசத்தில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு மாற்றுத் தெரிவொன்று அவசியமாக இருக்கிறது. கூட்டணி அமைப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். ஆனால், இலங்கையை பொறுத்தவரையில் உள்ளூராட்சிமன்ற தேர்தல் என்பது தேசிய அரசியல் நிலைப்பாடுகளில் தாக்கம் செலுத்தக் கூடியதொன்றல்ல. பெரும்பாலும் இந்த தேர்தல் குறித்த பிரதேசங்களிலுள்ள தேவைப்பாடுகள் மற்றும் அரசியல் கட்சிகளின் நிலைப்பாட்டை பொறுத்ததாகும். பொதுவாக குறிப்பிடுவதானால், பரந்துப்பட்ட பலமான புதிய அரசியல் சம்பிரதாயமே நாட்டின் அரசியலுக்கு தேவையாக இருக்கிறது. அதற்காகவே நாங்கள் முயற்சித்து வருகிறோம்.

நாங்கள் கூட்டணி அமைப்பது தொடர்பில் சிந்திக்கவில்லை. கூட்டணி அமைப்பதற்கான அழைப்பும் இதுவரையில் எங்களுக்கு கிடைக்கவில்லை. தேர்தலும் இன்னும் அறிவிக்கப்படவில்லை. எனவே, பொறுத்திருந்து பார்த்து தீர்மானிக்க வேண்டும்.

அதிகாரப்பகிர்வு என்பது நடைமுறைக்கு சாத்தியமற்ற விடயமாகும். ஆனால், சிறையிலிருக்கும் 31 விடுதலைப் புலிகளின் அங்கத்தவர்களை தொடர்ந்து சிறையில் வைத்திருப்பதால் எந்த பயனும் இல்லை. காரணம் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் வெளியிலேயே இருக்கிறார்கள். பிரபாகரனுக்கு பின்னர் விடுதலை புலிகளின் தலைவராக இயங்குவது குமரன் பத்மநாதன் என்பவராவார். ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களும் அண்மையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள். அவ்வாறு இருக்கையில் அவர்களை தொடர்ந்து சிறையில் வைத்திருப்பதில் பயனில்லை. எனவே, அவர்களை விடுதலை செய்து இந்த விடயங்களை மறக்க வேண்டியது அவசியமாகும்.

அதேபோன்று, யுத்த காலத்தில் தமிழ் மக்களின் காணிகள் இராணுவத்தால் கைப்பற்றப்பட்டிருந்தால் அவற்றை மீண்டும் அவர்களுக்கே பெற்றுக்கொடுக்க வேண்டும். ஆனால், வனப் பாதுகாப்பு நிலங்களையும் தொல்பொருள் நிலங்களை கோருவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம். அதற்கு இடமளிக்கவும் முடியாது. இது சிங்கள-தமிழ் பிரச்சினையும் கிடையாது. செய்யக்கூடாத செய்யகூடிய விடயங்கள் இருக்கின்றன. நாட்டில் சமஷ்டி ஆட்சிமுறையை உருவாக்க முடியாது. அதற்கு மக்கள் அபிப்பிராயம் அவசியமாகும். மக்கள் அபிப்பிராயத்துக்குச் சென்றால் வடக்கும் தெற்கும் இரண்டாக பிளவடையும்.

எனவே, செய்யக் கூடிய விடயங்களை பற்றி சிந்திக்க வேண்டும். உள்ளூராட்சிமன்ற தேர்தல் மற்றும் மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டும். மாகாணசபை தேர்தலை நடத்தி, வெற்றியடையும் கட்சிக்கு அதிகாரத்தை வழங்குவதே சிறந்த தீர்வாக அமையும். செய்ய முடியாத விடயங்களை முன்வைத்து மீண்டும் நாட்டில் முரண்பாடுகளை தோற்றுவிக்க முயற்சிக்கக் கூடாது. அதற்கு இடமளிக்க கூடாது என்றார்.

ஓரிரு தமிழ் அரசியல் தலைவர்களை தவிர, தமக்கு சமஷ்டி ஆட்சி வேண்டும் என்று தமிழ் மக்கள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கோரவில்லை. அதேபோன்று, வடக்கில் தனியான அரசொன்று உருவாகிறது அதனை எதிர்க்க வேண்டும் என்று சிங்கள மக்களும் கோரவில்லை. நாட்டின் கொள்கைகளை மாற்றிக்கொள்ள முடியாது. தற்போதுள்ள அடிப்படை பிரச்சினைகள் குறித்தே பேச வேண்டும். பொலிஸாரை அரசு அதிகாரத்திலிருந்து விடுவித்து சுயாதீனப்படுத்த வேண்டும்.

அமைச்சு பதவியை பெற்றக்கொள்ள நான் முயற்சிக்கவில்லை. மக்கள் ஆணையில்லாதவொரு அரசாங்கத்தில் அமைச்சு பொறுப்பை ஏற்க நான் தயாராகவும் இல்லை என்றார்.

### ஐந்து ஆண்டுகளை...

சிறப்புக் காரணங்களைக் கொண்ட அலுவலர்களைத் தவிர, 5 வருட சேவையை பூர்த்தி செய்த ஏனைய அனைத்து கிராம உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்வது கட்டாயம் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இது தொடர்பான அறிவுறுத்தல்கள் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### தினேஷ் கொலையில்...

தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அத்துடன் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக மேலும் பலரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளனர்.

தினேஷ் ஷாப்டரின் கையடக்கத் தொலைபேசியிலிருந்து பிரையன் தோமஸின் கையடக்க தொலைபேசிக்கு அனுப்பப்பட்ட குறுஞ்செய்தி பொரளை கனத்தை மயான பகுதியிலிருந்து தினேஷ் கொல்லப்பட்ட பின்னர் அனுப்பப்பட்டுள்ளது என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

அவரைக் கொலை செய்தவர் இந்த குறுஞ்செய்தியை ஷாப்டரின் கையடக்க தொலைபேசியிலிருந்து பிரையன் தோமஸுக்கு அனுப்பியுள்ளார் என கருதப்படுவதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் தினேஷ் ஷாப்டரின் மனைவியிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தினேஷ் ஷாப்டர் கொலை செய்யப்பட்ட அன்றிரவு 8.15 மணியளவில் தனது மனைவியுடன் இங்கிலாந்துக்கு செல்லவிருந்துள்ளார். தமது இங்கிலந்து பயணத்துக்கான அனைத்து பணிகளும் பூர்த்திசெய்யப்பட்டிருந்த நிலையில் மாலை 4.00 மணியளவில் கட்டுநாயக்க விமானநிலையத்துக்கு செல்லவிருந்ததாகவும் இதனால் ஷாப்டரின் மனைவி அவருக்கு தொடர் தொலைபேசி அழைப்புகளை ஏற்படுத்தியிருந்ததாகவும் விசாரணைகளில் மூலம் தெரியவந்துள்ளது.

இதேவேளை ஷாப்டரின் வீடு அமைந்துள்ள கறுவாத்தோட்டம் - ப்ளவர் வீதியிலிருந்து பொரளை பொதுமயானம் வரையிலான 42 சி.சி.டி.வி. கெமராக் கட்சிகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, விசாரணைகளின் போது சம்பவம் நடந்த தினத்தன்று ஷாப்டரின் கார் நேரடியாக அவரின் வீட்டிலிருந்து கனத்தை மயானத்திற்கு வந்தமை தெரியவந்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பில் பல ஆச்சரியமளிக்கும் விடயங்கள் வெளியாகியுள்ளன. விசாரணைகளை முன்னெடுத்துள்ளவர்கள் பல வியப்பளிக்கும் விடயங்களை வெளியிட்டுள்ளனர்.

மேலும், தமக்கு கிடைத்துள்ள பல தகவல்களை ஆராய்ந்து உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டர் படுகொலை வழக்கில் இதுவரை எவரும் கைதுசெய்யாத நிலையில் சம்பவம் தொடர்பில் பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. இந்தக் கொலை தொடர்பில் மேலும் பல்வேறு தரப்பினரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ 'தமிழன்' நாளிதழுக்கு நேற்று (19) தெரிவித்தார்.

இதேவேளை, கொலைச் சம்பவம் இடம்பெற்ற பொரளை மயானத்திலோ அல்லது அதனைச் சுற்றியுள்ள இடத்திலோ சி.சி.டி.வி. பொருத்தப்படாதது விசாரணைகளுக்கு பெரும் தடையாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பகுதியில் சி.சி.டி.வி. பொருத்தப்படாததை கொலையாளிகள் அவதானித்தே அப்பகுதியில் கொலையை செய்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ள பொலிஸார் கொலைச் சம்பவத்தில் இருவர் அல்லது மூவர் ஈடுபட்டிருக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

இந்நிலையில் பொரளை பொது மயானத்தை சுற்றியுள்ள பகுதியில் சி.சி.டி.வி. இன்மையால் குறித்த பகுதியில் பல்வேறு குற்றச்செயல்கள் இடம்பெற்றுவருவதாக கொழும்பு மாநகரசபை மேயர் ரோஸி சேனாநாயகவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட நிலையில், குறித்த பகுதியில் சி.சி.டி.வி. கெமராக்களை பொருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் ஷாப்டரின் கைத்தொலைபேசிக்கு வந்த சந்தேகத்திற்கிடமான பல அழைப்புகள் மூலம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏலவே, பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் பிரைன் தோமஸ் உட்பட 23 பேரிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 150 பேருடன்...

தெரிவித்துள்ளனர்.

அவர்கள் இந்தோனேஷியா நோக்கி புறப்பட்டதாக தெரிவித்துள்ளனர். ஒரு மாதத்தின் முன்னதாக படகு பயணத்தை ஆரம்பித்ததாகவும், ஒரு வாரம்வரையே போதியளவு உணவை உட்கொண்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் மற்றுமொரு படகு மியன்மாரிலிருந்து புறப்பட்டதாகவும் அதில் சுமார் 150 பேர் இருந்ததாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

### முஸ்லிம்களுக்கான...

ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.



ஆசிரியர் மருதூர் ஏ.ஹசன் எழுதிய 'முன்பள்ளி ஆசிரியர்கள் வழிகாட்டி' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று முன்தினம் (18) இடம்பெற்றபோது அங்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு முஸ்லிம் தலைவர்களிடம் கேள்வி எழுப்புவதாகத் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய அமைச்சர் நசீர் அஹமட்,

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை கண்டிப்பாக அமுல்படுத்த வேண்டும் என கடந்த வாரம் நடைபெற்ற அனைத்து கட்சிக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். அவ்வாறானால் முஸ்லிம்களது காணி தொடர்பான விடயங்களையும் அவர் முஸ்லிம்களிடம் வந்து கூறவேண்டும்.

வடக்கு - கிழக்கு மக்களது சகல காணிகளும் மீளக் கையளிக்கப்படல் வேண்டும். அதற்குப் பிறகே 13ஐ அமுல்படுத்துங்கள். அதுதான் நியாயமாகும்.

அதற்கு அப்பால் வடக்கு - கிழக்கை இணைப்பதென்றால் அந்த மாகாணங்களில் வாழும் சகல முஸ்லிம்களது அரசியல் அதிகாரம் என்ன? இதனைச் சொல்ல வக்கில்லாத அரசியல் தலைமைகள் முஸ்லிம்களது அரசியல் தலைவர்களாக அங்கு இருக்க முடியாது.

இந்த ஏமாற்று அரசியலுக்கு முஸ்லிம்கள் சோரம் போக முடியாது. தமிழ் - முஸ்லிம் உறவுகள் கட்டாயம் தேவையாகும். வடக்கு -கிழக்கு மக்களுக்கு கிடைக்கும் தீர்வுக்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் எந்தளவு தமிழ் சமூகம் பாதிக்கப்பட்டதோ அதே சமமான அளவு முஸ்லிம் சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தினை சரியான முறையில் புரிந்து கொண்டு நிரந்தர சமாதானம் மலர வேண்டும் என எல்லோரும் நினைத்தால் அதில் நிரந்தரமாக சகலரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் முஸ்லிம்களுக்கு அரசியல் அதிகாரமும் வடக்கு - கிழக்கில் முஸ்லிம்களது காணிப் பிரச்சினைகள் விகிதாசாரமும் சமமாகப் பேணப்படல் வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று தசாப்தகால யுத்தத்தில் 45க்கும் மேற்பட்ட முஸ்லிம் கிராமங்கள் அழிக்கப்பட்டன. அந்தக் கிராமங்கள் இன்று இருந்திருந்தால் அப்பிரதேசங்கள் சிறந்த நகரங்களாகியிருக்கும்.

அந்த மக்களை சிதறடிக்கவிட்டு அக்காணிகளை பலவந்தமாக பிடித்து வைத்துள்ளனார். இதனைப் பெற்றுக் கொடுக்க நான் பாடுபடுவேன். 13ஆவது திருத்தம் காணி, பொலிஸ் அதிகாரம் இல்லாமலேயே கடந்த காலத்தில் மாகாண சபைகள் ஆட்சிகள் நடந்து வந்த வரலாறுள்ளது. இந்த அதிகாரத்தில் மாகாண முதலமைச்சருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. நானும் கிழக்கு மாகாண சபை முதலமைச்சராக இருந்து வந்துள்ளேன். அதன் அனுபவத்தில் சொல்கின்றேன்.

நான் கிழக்கு மாகணசபைக்கு முதலமைச்சராக எப்படி வந்தேன் என்பதை இன்று இந்த மேடையில் வைத்து முதன்முதலாகச் சொல்லுகின்றேன்.

நான் கிழக்கு மாகாண முதலமைச்சராக வந்தது ரவூப் ஹக்கீமாலோ அல்லது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினாலோ அல்ல. அது குறிப்பாக இன்று கல்வியமைச்சராக இருக்கின்ற சுசில் பிரேமஜயந்தவினால் மட்டுமே. அன்று சுசில் பிரேம ஜயந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளராக இருந்தார்.

அவருடைய கட்சியில் 14 மாகாணசபை உறுப்பினர்கள் இருந்தார்கள். அவர்களை கொழும்புக்கு அழைத்திருந்தார். அவர்களில் 13 பேர் வந்திருந்தாகள். அன்று 13 பேரும் முதலமைச்சராக நசீர் அஹமட்டின் பெயரைச் சொல்லி சத்தியக் கடதாசியில் ஒப்பமிட்டார்கள். அதனூடகத்தான் நான் கிழக்கு முதலமைச்சர் பதவியைப் பெற்றேன் என்றார்.



ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் தனது பதவிக்காலம் முடிந்து நாடு திரும்பும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (19) முற்பகல் சந்தித்தார். ஹனா சிங்கர், 2018 செப்டெம்பர் 07ஆம் திகதிமுதல் இலங்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட இணைப்பாளராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.



ஜனாதிபதியின் காலநிலை தொடர்பான சர்வதேச ஆலோசகரான முன்னாள் நோர்வே அமைச்சரும், சமாதான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டவருமான எரிக் சொல்ஹெய்ம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டதரணி நிசாம் காரியப்பர் ஆகியோரை நேற்று (19) முற்பகல் சந்தித்து முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் இல்லத்தில் இடம்பெற்றது.

# இலங்கையின் உணவுப் பாதுகாப்பு நெருக்கடி மேலும் தீவிரமடைகிறது

## உணவு விவசாய ஸ்தாபனம் தெரிவிப்பு

அரசியல் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக இலங்கையில் 2022இல் மனிதாபிமான தேவைகள் தொடர்ந்தும் அதிகரிக்கின்றன - என ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

அதிகரித்துவரும் உணவு நெருக்கடியை இலங்கை துரிதமாக எதிர்கொள்கிறது. நால்வரில் ஒருவர் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் என ஐ.நா. அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜூன் 2022 முதல் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனம் தனது மனிதாபிமான நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது.

இலங்கை முன்னொருபோதும் இல்லாத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அரசியல், சமூக குழப்பநிலை காரணமாக இந்த நிலைமை தீவிரமடைந்துள்ளது.

இலங்கையின் சனத்தொகையில் 40 வீதமானவர்கள் தங்கள் முக்கிய வருமானத்திற்காக விவசாயத்தை எதிர்பார்த்துள்ளனர்.

தொடரும் பல்பரிமாண நெருக்கடி மக்களின் வாழ்வாதாரத்திற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதுடன், தேசிய உணவு முறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

உரங்கள் உட்பட ஏனைய அத்தியாவசியப் பொருட்கள் இன்மையால் 2021 முதல் விவசாயம் வீழ்ச்சி நிலையில் காணப்படுகின்றது. கால்நடை வளர்ப்பாளர்கள் தங்கள் கால்நடைகளுக்கு உணவு வழங்க முடியாத நிலையிலும் அடிப்படை கால்நடை மருந்துகளை வழங்க முடியாத நிலையிலும் உள்ளனர். மீனவர்கள் தங்கள் இயந்திரப் படகுகளைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக உள்ளூர் சந்தைகளில் உணவு விநியோகம் குறைவடைகின்றது. உணவு பணவீக்கம் அதிகரித்து காணப்பட்டது. மேலும் நான்கில் ஒரு குடும்பம் வருமான குறைப்பை எதிர்கொண்டுள்ளது. இரண்டில் ஒரு குடும்பம் வருமானம் இன்மை அல்லது உணவின்மையை சமாளிப்பதற்காக எதிர்மறையான நடவடிக்கைகளில் தங்கியுள்ளது.

# புதிய கடற்படைத் தளபதி ஜனாதிபதியுடன் சந்திப்பு





புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா நேற்று (19) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

இலங்கை கடற்படையின் 25ஆவது கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா நேற்றுமுன்தினம் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

புதிய கடற்படைத் தளபதி, பதவியேற்றதன் பின்னர் சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதியைச் சந்தித்ததுடன், நினைவுச்சின்னம் ஒன்றையும் வழங்கினார்.

# மாணவர்களுக்கான சீருடை சீன அரசால் நன்கொடை



2023ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர்களின் சீருடைத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக 5 பில்லியன் ரூபா பெறுமதியான (90 மில்லியன் சீன யுவான்) சீருடையை சீனா இலங்கைக்கு வழங்கியுள்ளது. குறித்த சீருடை 70 சதவீதமான தேவையை பூர்த்தி செய்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனை வழங்குவதில் பெருமிதம் கொள்வதாகவும் இலங்கைக்கான சீனத் தூதரகம் தனது ட்விட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

அதன் முதலாவது தொகுதியாக 3 மில்லியன் மீற்றர் துணி பூரணமாக 20 கொள்கலன்களில் 38 ஆயிரம் பெட்டிகளில் அடைக்கப்பட்டு அந்தக் கப்பல் சீனாவிலிருந்து புறப்பட்டுள்ளதாக தூதரகம் தெரிவித்துள்ளது.

# விவசாய நிலத்தில் மேய்ச்சலில் ஈடுபட்ட 12 மாடுகள் உயிரிழப்பு

## வவுனியாவில் சம்பவம்



(வவுனியா நிருபர்)

வவுனியா, பூம்புகார் கிராமத்திலுள்ள விவசாய நிலத்தில் மேய்ச்சலில் ஈடுபட்ட 12 மாடுகள் உயிரிழந்துள்ளதுடன், பல மாடுகள் உடல் சோர்வுற்று அவதிக்குள்ளாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் (18) மாலை 6 மணிக்குப் பின் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த கிராமத்திலுள்ள விவசாய நிலத்தினுள் அப்பிரதேசவாசிகளின் மாடுகள் சில உட்புகுந்து அங்குள்ள உழுந்து மற்றும் நெற்பயிர்களை மேய்ந்துள்ளதாகவும், இதனைக் கண்ணுற்ற விவசாய நில உரிமையாளர் ஆத்திரமடைந்து அம்மாடுகளுக்கு யூரியா மற்றும் பூச்சிகொல்லி மருந்தையும் நீரில் கலந்து குடிக்க வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதனை அம்மாடுகள் பருகி உயிரிழந்துள்ளதாக அக்கிராம கமக்கார அமைப்பினர் மற்றும் மாட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர். இதனைவிட அந்நீரை பருகிய ஏனைய மாடுகளும் தற்போது நோய்வாய்ப் பட்டுள்ளதாகவும் மாட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸாருக்கு மாட்டு உரிமையாளர்களால் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து அவர்கள் நேரில் சென்று நிலைமையை பார்வையிட்டதுடன், இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

அத்துடன், வவுனியா கால்நடை வைத்திய அதிகாரியும் குறித்த கிராமத்திற்கு சென்று மாடுகளின் உயிரிழப்புக்கான காரணம் தொடர்பில் உடற்கூற்றுப் பரிசோதனைகளை முன்னெடுத்துள்ளார்.

# வெள்ளவத்தையில் நேற்று இளம் பெண் தற்கொலை

## ருத்ரா மாவத்தையில் சம்பவம்



கொழும்பு வெள்ளவத்தை பிரதேசத்திலுள்ள தொடர்மாடி குடியிருப்பு வீடொன்றில் 6ஆவது மாடியிலிருந்து கீழே விழுந்து இளம் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

வெள்ளவத்தை ருத்ரா மாவத்தையிலுள்ள தொடர்மாடி குடியிருப்பில் இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் நடந்துள்ளதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் 26 வயதான இளம் பெண்ணே உயிரிழந்துள்ளார். இந்த இளம் பெண் தனது பெற்றோருடன் தொடர்மாடி குடியிருப்பில் 6ஆவது மாடியில் இருக்கும் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்தப் பெண் தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பெண்ணின் கணவன் லண்டன் நகரில் வசித்துவந்த நிலையில் கொவிட் தொற்று ஏற்பட்டு உயிரிழந்துள்ளார்.

**யாழ்ப்பாண வர்த்தகருடன் மறுமணம்**

இதன்பின்னர் இந்தப் பெண் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரை பதிவு திருமணம் செய்துகொண்டதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வெள்ளவத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தூய தமிழில் பெயர் வைத்த குடும்பங்களுக்கு பணப் பரிசு

## வவுனியாவில் வழங்கிவைப்பு



(வவுனியா நிருபர்)

'தனயன் வழியில் தமிழ்மொழி காப்போம்' என்னும் தொனிப்பொருளில் தூய தமிழில் பெயர் வைத்த குடும்பங்களுக்கு பணப்பரிசில் வழங்கும் நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியின் ஏற்பாட்டில் வவுனியா, இறம்பைக்குளம் பகுதியிலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இந்நிகழ்வு நேற்று (19) இடம்பெற்றிருந்தது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை பாதுகாக்கும் திட்டத்தின்கீழ் பிறக்கின்ற குழந்தைகளுக்கு தூய தமிழில் பெயர் வைப்பதை ஊக்குவிக்கும் முகமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணியால் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

அதன் முதல் நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்றிருந்த நிலையில், அதன் தொடர்ச்சியாக இரண்டாவது மாவட்டமாக வவுனியாவில் தூய தமிழில் பெயர் வைத்த 22 குடும்பங்களுக்கு 5000 ரூபா பணம் பரிசாக வைப்புசெய்யப்பட்டு வங்கிப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

இதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணிச் செயலாளர் ஸ்ரீபிரசாத் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கட்சியின் இளைஞர் அணிச் செயற்பட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் நேற்றுமுதல் நடைமுறைக்கு வந்தது



நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று (19) தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார். கடந்த 09ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற இச்சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தைத் தொடர்ந்து எதிர்க்கட்சியினர் விடுத்த கோரிக்கைக்கமைய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில் சட்டமூலத்துக்கு ஆதரவாக 83 வாக்குகளும், எதிராக 41 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதன்பின்னர் சட்டமூலத்தின் மூன்றாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பில் இதற்கு ஆதரவாக 79 வாக்குகளும், எதிராக 36 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதற்கமைய மேலதிக வாக்குகளால் உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது. இதற்கமைய இந்தச் சட்டமூலம் 2022ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமாக இன்றுமுதல் நடைமுறைக்கு வருகிறது.

# மிருகக்காட்சிச்சாலையை இலவசமாக பார்வையிட சந்தர்ப்பம்

எதிர்வரும் 23 மற்றும் 24ஆம் திகதிகளில் தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையை இலவசமாக பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக தேசிய மிருகக்காட்சிச் சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 23ஆம் திகதி சிரேஷ்ட பிரஜைகளும் எதிர்வரும் 24ஆம் திகதி சிறுவர்களும் இலவசமாக மிருகக்காட்சிச் சாலையை பார்வையிட முடியும் - என தேசிய மிருகக்காட்சிச்சாலைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜகத் பிரேமகாந்த குறிப்பிட்டார்.

எதிர்வரும் 23, 24 மற்றும் 25ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள மிருகக்காட்சிச் சாலையின் சுற்றாடல் கல்வி கண்காட்சிக்கு இணையாக இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.



எதிர்வரும் உழவர் திருநாளை முன்னிட்டு சிறப்பு பட்டிமன்றமும் விருது வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் (18) கொழும்பு பம்பலப்பிட்டி லோரன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபதில் நடைபெற்றது. தமிழக பிரபல பட்டிமன்ற நடுவர் முனைவர் நெல்லை சுப்பையா கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (படப்பிடிப்பு - நசார்)

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, டிசம்பர் 20ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# வரவேற்கப்படவேண்டிய தீர்மானம்!

அரசின் அடுத்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டத்தின் மீதான இறுதி வாக்கெடுப்பின்போது தமிழர் தரப்பு அதற்கு எதிர்ப்புக் காட்டவில்லை. வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் நடுநிலைமை வகித்தது.

எனினும், குழுநிலை விவாதத்தின்போது பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடு தொடர்பில் வாக்களிப்புக் கோரி அதில் தனது எதிர்ப்பைப் பதிவு செய்தது தமிழர் தரப்பு.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கும் தீர்வு முயற்சிக்கு சாதகமான பிரதிபலிப்பைக் காட்டவேண்டும் என்ற நியாயம் கருதி வரவு - செலவுத் திட்டத்தை தமிழர் தரப்பு பகிரங்கமாக எதிர்க்காமல் விட்டாலும், பொருளாதாரத்தால் நலிவுற்றிருக்கும் நாட்டுக்குத் தொடர்ந்து அதிக பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு செய்வதை ஆட்சித் தரப்பின் அடக்குமுறை எண்ணவோட்டத்தை காட்டுவதாகவே கருதியது. நாடாளுமன்றத்திலும் இவ்விடயம் தொடர்பிலும் தனது கருத்தை தமிழ்க் கட்சிகள் வலிமையாகப் பதிவு செய்யத் தவறவில்லை.

இப்போது பாதுகாப்பு அமைச்சுக்கான செலவினத்தைக் குறைப்பதற்காக அதிகாரிகள் உட்பட சுமார் 16 ஆயிரம் இராணுவத்தினரை நேரத்துடன் பணி ஓய்வு பெற அனுமதிப்பது என்ற முடிவுக்குப் பாதுகாப்பு அமைச்சு வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கும் இராட்சத நிதி ஒதுக்கீட்டை குறைப்பதற்காக, படைகளில் இருப்போர் அவர்களுக்கான ஒப்பந்த காலத்துக்கு முன்னர் பதவிகளில் இருந்து வெளியேற அல்லது ஓய்வு பெறக் கோரினால் அதைச் சாதகமாகப் பரிசீலிக்கும்படியான யோசனை ஒன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரவு - செலவுத் திட்ட சமயத்தில் முன் வைத்திருந்தார். அதன் கீழ் இப்போது முன்கூட்டியே ஓய்வுக்கு இடமளிக்கும் முடிவுக்குப் பாதுகாப்பு அமைச்சு வந்திருப்பதாக கூறப்படுகிறது

முதற்கட்டமாக படை விட்டோடிகள் எனக் கருதப்படும் சுமார் 16 ஆயிரம் இராணுவத்தினருக்கு நிரந்தர ஓய்வு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்காகப் படை விட்டோடிகள் அல்லது சொல்லிக் கொள்ளாமல் சேவைக்குத் திரும்பாதவர்களுக்கு மன்னிப்பளித்து, நிரந்தர விடுவிப்பு வழங்கும் சகாய காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அது இந்த வருட முடிவு வரை - டிசம்பர் 31 வரை - ஆகும்.

இந்த வகையில் வெளிநாடுகளில் இருப்போர் உட்பட 16,141 படை விட்டோடிகள் பொது மன்னிப்பு மற்றும் சேவை விடுவிப்புக்கு விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களில் 21 அதிகாரிகள் மற்றும் 15 ஆயிரத்து 838 சிப்பாய்களுக்கு ஓய்வு அனுமதி வழங்கப்படுகின்றது. அதேபோல விமானப்படையில் இருந்து சேவைக்கு திரும்ப தவறிய 938 பேரில் 732 பேருக்கு ஓய்வுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எது, எப்படி என்றாலும் படைகளுக்கு ஆட்குறைப்பு எந்த வழியில் வந்தாலும் அது இன்றைய பொருளாதார நிலையில் வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.


ஆனால், இதே செயற்பாட்டை எதிர்க்கட்சி வரிசையில் இருக்கும் இனவாத அரசியல்வாதிகளான விமல் வீரவங்ச ,உதய கம்மன்பில ஆகியோர் வேறு வகையில் விமர்சிக்கலாம். வெளிநாட்டு சக்திகளின் பேச்சை அல்லது டயஸ்போராவின் பேச்சைக் கேட்டு படைபலத்தை குறைக்க ரணில் அரசு சதிகளை செய்வதாக அவர்கள் கூறக்கூடும். ஆனால், நிதானமாக நின்று யோசிப்போமானால் அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் வரவேற்புக்குரியதே.

# மறக்க முடியாத மிருசுவில் படுகொலைகள்

**(இச்சம்பவம் இடம்பெற்று 22 ஆண்டுகள் இன்றுடன் நிறைவு பெறுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது)**







தமது வீடுகளை விட்டு வெளியேறிய 8 பொதுமக்கள் தமது வீடுகளைச் சென்று பார்ப்பதற்காக யாழ். நகரிலிருந்து 25 கி.மீ. தொலைவிலுள்ள மிருசுவிலுக்குச் சென்றபோது 2000ஆம் ஆண்டு டிசம்பர் 19இல் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் இலங்கை இராணுவத்தினர் என்று சந்தேகிக்கப்படும் நபர்களால் 2000ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டார்கள்.

மிருசுவிலில் இருந்து உடுப்பிட்டிக்கு இடம்பெயர்ந்த சில அகதிகள் தமது வீடுகளைப் பார்ப்பதற்காகவும் அங்குள்ள காட்டில் விறகு வெட்டி வரவும் உள்ளூர் அதிகாரிகளிடமிருந்து அனுமதி பெற்று டிசம்பர் 19ஆம் திகதி மிருசுவிலுக்குச் சென்ற வேளை அரைகுறையாக புதையுண்ட நிலையில், இளம்பெண் ஒருவரின் சடலத்தை அங்கு கண்டிருந்தனர். அவர்களுள் சிலர் தமது குடும்பத்தாருடன் இத்தகவலைப் பகிர்ந்து கொண்டுமிருந்தனர். அடுத்த நாள் அதே பகுதிக்குச் சென்று குறித்த சடலத்தை அடையாளம் காண முற்பட்டவேளையில், அங்கு நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவத்தினரிடம் அகப்பட்டுக் கொண்டார்கள்.

இவர்களுள் 8 பேர் படுகொலை செய்யப்பட்டு அப்பகுதியிலுள்ள பொதுமகன் ஒருவரது வீட்டு மலசலகூடக் குழியினுள் வீசப்பட்டிருந்தனர். கைதுசெய்யப்பட்டவர்களில் பொன்னுத்துரை மகேஸ்வரன் என்பவர் பலத்த காயங்களுடன் இந்தத் தாக்குதல்களிலிருந்து தப்பி வந்து தனது உறவினர்களுக்குத் தகவல் கொடுத்ததையடுத்தே இக்கொலைகள் பற்றிய விபரங்கள் தெரியவந்தன. அவர் வழங்கிய தகவலின் பேரிலேயே படுகொலை செய்யப்பட்டவர்களது சடலங்கள் மலசலகூடக் குழியிலிருந்து பின்னர் பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தன.

இப்படுகொலை தொடர்பான விசாரணைகளின்போது சர்ச்சைக்குரிய பெண்ணின் சடலம் பற்றியும் சாவகச்சேரி நீதிமன்றில் சாட்சிகள் வாக்குமூலம் அளித்திருந்தனர். எனினும், நீதிபதி முன்னிலையில் தேடுதல்கள் நடத்தப்பட்டிருந்த போதிலும், அரைகுறையாகப் புதைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கவில்லை.

மாவட்ட வைத்திய அதிகாரி மரு.சி.கதிரவேற்பிள்ளையின் சாட்சியப்படி, கொலை செய்யப்பட்டவர்களின் கழுத்துகள் வெட்டப்பட்டுள்ளன. கொல்லப்பட்டவர்களில் 3 பதின்ம வயதுச் சிறுவர்கள் மற்றும் ஐந்து வயதுச் சிறுவன் வில்வராசா பிரசாத் ஆகியோரும் அடங்குவர். கொல்லப்பட்டவர்கள் அனைவரும் 5 வயதிற்கும் 41 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் . இதனையடுத்து நடந்த விசாரணைகளயடுத்து 5 இராணுவத்தினர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். சட்டவிரோதக் கைது, சித்திரவதை, படுகொலை மற்றும் புதைகுழிகளில் புதைத்தமை உட்பட 17 குற்றச்சாட்டுகள் இவர்கள் மீது சுமத்தப்பட்டன.

### தாக்கங்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அன்றைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எழுதிய கடிதத்தில், பெண்ணொருவரின் உடல் அப்பகுதியில் புதைக்கப்பட்டிருந்ததாகவும், மேலும் பல உடல்கள் இவ்வாறு புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டிருந்தார். மிருசுவில் பகுதியில் புதைகுழிகளைத் தேட உதவுமாறும் அவர் கேட்டுக் கொண்டார் .

மனித உரிமைக் குழுக்கள் பல, இது குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்ததையடுத்து 14 இராணுவத்தினர் கைதுசெய்யப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். பின்னர் இந்த வழக்கு அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு 2002, மே 20 இல் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கை விசாரணை செய்ய மூன்று நீதிபதிகள் அடங்கிய குழுவை 2002 நவம்பர் 27 அன்று சட்டமா அதிபர் நியமித்தார்.

### தொடர் விசாரணை

ஜூரிகள் எவருமில்லாமல் இவ்வழக்கை விசாரிப்பதற்கு அரசு தீர்மானித்தது.

இவ்வழக்கு பின்னர் கொழும்பு விசேட மேல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. மூவரடங்கிய நீதிபதிகள் குழு சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு 2011, ஏப்ரல் 28 அன்று சென்று பார்வையிட்டது. கொலைகள் நடைபெற்ற இடம், கொல்லப்பட்டவர்கள் புதைக்கப்பட்டிருந்த இடம், அடையாள அணிவகுப்பு நடத்தப்பட்ட நீதிமன்ற வளாகம் ஆகியவற்றை இந்த நீதிபதிகள் மூவரும் பார்வையிட்டு அதற்கான தகவல் குறிப்புகளைப் பதிவுசெய்தனர். கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தீபாலி விஜயசுந்தர, எச்.என்.பி.பி.வராவவ, சுனில் ராஜபக்ஷ ஆகிய 3 நீதிபதிகளும் பிரதி சட்டமா அதிபர் சரத் ஜயமான மற்றும் அதிகாரிகளுமே மிருசுவில் பகுதிக்குச் சென்றிருந்தனர்.

இந்த வழக்கின் ஆரம்பகட்ட விசாரணைகளை நடத்திய அப்போதைய சாவகச்சேரி நீதவான் அன்னலிங்கம் பிரேம்சங்கர், சந்தேக நபர்கள் மீதான அடையாள அணிவகுப்பை நடத்திய அப்போதைய பதில் நீதவான் சுப்பிரமணியம் கந்தசாமி, இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் தரப்பில் ஆரம்ப விசாரணைகளை நடத்திய பொலிஸ் பொறுப்பதிகாரி சமரக்கோன் பண்டார ஆகியோர் நீதிபதிகள் குழுவினருக்கு சம்பவங்கள் நடைபெற்ற இடங்களை அடையாளம் காட்டினர். நீதிபதிகள் குழுவினருடன் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து இராணுவத்தினரும் மிருசுவில் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் .

### தீர்ப்பு

8 தமிழர்களின் கழுத்தை அறுத்து படுகொலை செய்த, இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சுனில் ரத்னநாயக்க என்பவருக்கு கொழும்பு நீதிமன்றம் 2015 ஜூன் 25 அன்று மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த 4 இராணுவத்தினரை போதிய ஆதாரமில்லை என்று தெரிவித்து விடுதலை செய்வதாக நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

### மன்னிப்பு

மரணதண்டனை விதிக்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவை 2020 மார்ச் 26 அன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மன்னிப்பளித்து விடுவித்தார். இவ்விடுதலை குறித்து மனித உரிமைகள் அமைப்புகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கடும் கண்டனங்களை வெளியிட்டன.

சட்டத்திற்குப் புறம்பான முறையில் படுகொலை செய்து மனித உரிமையை மீறிய குற்றச்சாட்டு தொடர்பில் இலங்கை இராணுவத்தின் முன்னாள் பதவிநிலை சார்ஜன்ட் சுனில் ரத்நாயக்கவிற்கு அண்மையில் அமெரிக்கா பிரயாணத் தடையை விதித்தமை குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாளில்...

- 1844 – இலங்கையில் அடிமை முறையை முற்றாக ஒழிக்கும் அரசாணை பிறப்பிக்கப்பட்டது.
- 1917 – சோவியத் ஒன்றியத்தின் முதலாவது இரகசிய பொலிஸ்துறையான 'சேக்கா' அமைக்கப்பட்டது.
- 1943 – பொலிவியாவில் இராணுவப் புரட்சி இடம்பெற்றது.
- 1951 – அணு ஆற்றலினாலான மின்சாரம் முதல் தடவையாக அமெரிக்காவில் ஐடஹோ மாநிலத்தில் பிறப்பிக்கப்பட்டது. இது 4 மின்குமிழ்களை எரிக்கப் பயன்பட்டது.
- 1955 – கார்டிஃப் வேல்ஸின் தலைநகரமாக அறிவிக்கப்பட்டது.
- 1957 – போயிங்-707 விமானம் தனது முதலாவது பயணத்தை மேற்கொண்டது.
- 1971 – 'எல்லைகளற்ற மருத்துவர்கள்' என்ற தன்னார்வ அமைப்பு பாரிஸ் நகரில் தொடங்கப்பட்டது.
- 1988 – போதைப்பொருள் கடத்தலுக்கெதிரான ஐ.நா. சாசனம் வியன்னாவில் கையெழுத்திடப்பட்டது.

1999 – மக்காவு போர்த்துக்கலிடம் இருந்து சீனாவிடம் கைமாறியது.

2000 – மிருசுவில் படுகொலைகள்: யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் 3 வயதுக் குழந்தை உட்பட 8 பொதுமக்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

## நக்கல் நமசிவாயம்

ஒரு நாளில நாலைஞ்சு கொலை, கொள்ளை சம்பவங்கள் நடக்குது... போதைப்பொருள் வியாபாரமும் ஓகோ எண்டு ஓடுது... இதெல்லாத்தையும் நிப்பாட்ட கோட்டாதான் வரோணும் எண்டு சொன்னாலும் சொல்லுவாங்கள்..!



## அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில்

# இளம் அதிகாரிகளுக்கு அதிக வாய்ப்பு

### ஜனாதிபதியின் செயலாளர்





அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இளம் அரச உத்தியோகத்தர்களுக்கு அதிக வாய்ப்புகளை வழங்கத் தயார் - என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அத்துடன், அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதில் அரச அதிகாரிகள் பெரும் செல்வாக்குச் செலுத்த முடியுமென சுட்டிக்காட்டிய ஜனாதிபதியின் செயலாளர், அதற்காக அரச உத்தியோகத்தர்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கொள்ளுப்பிட்டி சமுத்திரா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் 2012ஆம் ஆண்டுக் குழுவின் வருடாந்த சிநேகபூர்வ ஒன்றுகூடலில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போதைய ஜனாதிபதி பல சவால்களுக்கு மத்தியில் நாட்டின் பொறுப்பை ஏற்று தற்போது முறையாக பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி, அபிவிருத்தியடைந்த நாட்டை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதியின் செயலாளர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக 2012ஆம் ஆண்டு குழுவினர் ஆற்றிய பணியை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க பாராட்டியிருந்தார்.

"Be the impact" என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற இலங்கை நிர்வாக சேவையின் 2012ஆம் ஆண்டுக் குழுவினரின் வருடாந்த சிநேகபூர்வ ஒன்றுகூடலில் அதன் தலைவர் சுரங்க ரணசிங்க உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் பணியாற்றிவரும் 2012ஆம் ஆண்டுக் குழுவின் சிரேஷ்ட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## 4 தூதுவர்கள் மற்றும் 2 வதிவிடப் பிரதிநிதிகளின் நியமனங்களுக்கு நாடாளுமன்றக் குழுவின் அனுமதி




நான்கு தூதுவர்கள் மற்றும் இரண்டு வதிவிடப் பிரதிநிதிகளின் நியமனங்களுக்கு நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழுவின் அனுமதி அண்மையில் (13) வழங்கப்பட்டதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய, பிரான்ஸுக்கான இலங்கையின் புதிய தூதுவராக மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்பின் (UNESCO) இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக நிரோஷனி மனீஷா டயஸ் அபேவிக்ரம குணசேகரவை நியமிப்பதற்கு நாடாளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதேபோன்று, சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக ஹிமாலி சுபாஷினி டி சில்வா அருணதிலகவை நியமிப்பதற்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

மேலும், ஜேர்மனுக்கான புதிய தூதுவராக லங்கா வருணி முத்துகுமாரனவை நியமிப்பதற்கும், ஜோர்தானுக்கான புதிய தூதுவராக ஜே.ஏ.டி.எஸ்.பிரியங்கிகாவை நியமிப்பதற்கும், வியட்நாமுக்கான புதிய தூதுவராக சஜீவ உமங்க மெண்டிஸை நியமிப்பதற்கும் உயர் பதவிகள் பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

உயர் பதவிகள் பற்றிய குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாடாளுமன்றத்தில் கூடியதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனவிரத்ன, அனுர பிரியதர்ஷன யாப்பா, தலதா அத்துகோரல, விஜித ஹேரத், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சிகள்







ஜனாதிபதி அலுவலக வளாகத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் சுற்றுலா அபிவிருத்திச் சபை, முப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து ஏற்பாடு செய்திருந்த விசேட கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி உள்ளிட்ட கொண்டாட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஞாயிற்றுக்கிழமை (18) மாலை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

காலிமுகத்திடலை அண்மித்த பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்ச்சியைக் காண பெருந்திரளான மக்கள் இன, மத பேதமின்றி ஜனாதிபதி அலுவலக வளாகத்தைச் சுற்றி திரண்டிருந்தனர்.

நிகழ்ச்சியைக் காண்பதற்காக அங்கே குழுமியிருந்த மக்களிடம் ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்டிருந்ததுடன், அவர்கள் ஜனாதிபதிக்கும் அமோக வரவேற்பளித்தனர். அங்கு வருகை தந்திருந்த சிறுவர்களிடம் விவரங்களைக் கேட்டறிந்த ஜனாதிபதி, அவர்களுடன் புகைப்படங்களையும் எடுத்துக்கொண்டார்.

முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த பாடகர் குழுவினரின் பங்குபற்றலுடன் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் கிறிஸ்துமஸ் கரோல் நிகழ்ச்சியும் ஆரம்பமானது. டி.எஸ் சேனாநாயக்கவின் சிலைக்கு முன்பாக உள்ள படிக்கட்டுகளில் அமர்ந்திருந்த ஜனாதிபதி, அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருடன் இணைந்து கிறிஸ்மஸ் கரோல் இசை நிகழ்ச்சியைப் பார்வையிட்டார். இந்த கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சி மற்றும் கொண்டாட்டங்கள் டிசம்பர் 23ஆம் திகதிவரை இரவு 7.00 மணிமுதல் 8.30 மணிவரை நடைபெறும்.

## திருவெம்பாவையை முன்னிட்டு யாழில் நடத்தப்பட்ட போட்டிகள்







திருவெம்பாவையை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரால் சைவ சமய கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் போட்டிகள் பல்கலைக்கழக மாணவர்களிடையே நேற்று முன்தினம் (18) நடத்தப்பட்டன.

2020ஆம் ஆண்டுமுதல் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களினால் திருவெம்பாவை ஓதல் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் இவ்வருடம் மாணவர்களிடையே ஆன்மிக கலாசார விழுமியங்களை வெளிக்கொணரும் முகமாக குறித்த போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளன.

இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

திருவெம்பாவை விரத காலத்தில் மார்கழி பெருவிழா எனும் தொனிப்பொருளில் மாணவர்களால் சைவசமய ஆன்மீகம் சார்ந்த நிகழ்வுகள் இடம்பெற்று வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

## பாலியல் தொந்தரவுக்கு முற்றுப்புள்ளி: வவுனியாவில் ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு!







**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் பாதுகாப்பான பயணத்திற்கு எனும் தொனிப்பொருளில் பாலியல் தொந்தரவிற்கு முற்றுப்புள்ளி வைத்தல் எனும் ஸ்ரிக்கர் ஒட்டும் நிகழ்வு மற்றும் துண்டுப்பிரசுரம் வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் தேசிய பெண்கள் குழு என்பன இணைந்து முன்னெடுத்த இச் செயற்றிட்டம் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் நேற்று காலை 9.30 மணியளவில் இடம்பெற்றிருந்தது.

குறித்த ஸ்ரிக்கரில் பாதுகாப்பான பயணத்திற்கு வன்முறைக்கு முற்றுப்புள்ளி வைப்போம், உங்களுக்கு வன்முறை இடம்பெற்றால் அமைதியாக இருக்க வேண்டாம். எதிர்த்துப் போராடுங்கள், வன்முறையை பார்க்கும்போது அதனை தடுக்க முன்வாருங்கள், இது சட்டரீதியான தண்டனைக்குரிய குற்றமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவசர தொலைபேசி இலக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் மாவட்ட செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்ததுடன், பஸ்களில் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டதுடன், துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டது.




## 19.12.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 13 1544 | 140 4748 |
| கனேடியன் டொலர் | 150 8831 | 163 030 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 4 6345 | 42 7822 |
| யூரோ | 27 622 | 284 8111 |
| ஜப்பான் யென் | 1 5205 | 1 6306 |
| சிங்கப்பூர் டொலர் | 152 8300 | 164 2041 |
| ஸ்ரேலிங் பவுன் | 326 4036 | 343 42 4 |
| சுவிஸ் பிராங்க் | 271 2511 | 3 0 4431 |
| ஐ.அ.டொலர் | 250 0862 | 260 6080 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 1672 |
| குவைட் | குவைட் தினார் | 0,072 6182 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 1646 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 7672 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 4511 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 770 |








*வட்டவான் ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பங்குகொண்ட வாணி விழாவும், பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் (18) புத்தளம் மாவட்ட புள்ளிவிவரத் தலைவர் சி.தனபாலசிங்கம் தலைமையில் கட்டைக்காடு புனித சவேரியார் கலையரங்கில் இடம்பெற்றது.*

*இதன் போது, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.ஆர்.அலி சப்ரி கலந்து உரையாற்றுவதையும், மாணவர் ஒருவருக்கு பரிசு வழங்குவதையும், புத்தளம் மாவட்ட செயலாளர் எச்.எம்.எஸ்.பி.ஹேரத்தை சி.தனபாலசிங்கம் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (உடப்பு செய்தியாளர்)*

# தோற்கடிக்கப்பட்டு பதவியை இழக்காதிருக்க இராஜினாமா செய்த பருத்தித்துறை நகர சபைத் தலைவர்



(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை நகர சபையின் வரவு-செலவுத் திட்ட கூட்டம் நேற்று (19) நடைபெறவிருந்த நிலையில் நகர சபைத் தலைவர் யோ.இருதயராஜா தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

பருத்தித்துறை நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று (19) சபையில் சமர்ப்பிக்கப்பட்டு, விவாதங்கள் இடம்பெறவிருந்தன.

வரவு-செலவுத் திட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் உள்ளிட்ட சபையில் அங்கம் வகிக்கும் கட்சி உறுப்பினர்கள் தோற்கடிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகி யிருந்த நிலையில், தலைவர் நேற்றுக் காலை சபை அமர்வுக்கு முன்பதாகவே தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட பருத்தித்துறை நகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட வரைபு கடந்த 06ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் உள்ளிட்ட 8 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்து தோற்கடித்தனர்.

இந்நிலையில், நேற்று திருத்தங்களுடன் சபையில் சமர்ப்பிக்கப்படவிருந்த வரவு-செலவுத் திட்டத்தையும் உறுப்பினர்கள் தோற்கடிக்க திட்டமிட்டுள்ளதாக வெளியான தகவலையடுத்து நகர சபைத் தலைவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இரண்டாம் தடவையும், வரவு-செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் தலைவர் பதவி வறிதாகும். இந்நிலையில், தோற்கடிக்கப்பட்டு தலைவர் பதவியை இழக்காதிருப்பதற்காக தலைவர் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என சபை உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

# தலைமன்னார் கடற்பரப்பு ஊடாக இந்தியா செல்ல முயன்ற 5 பேர் கைது

(மன்னார் நகர் நிருபர்)

தலைமன்னார் கடற்பரப்பு ஊடாக சட்டவிரோத மான முறையில் இந்தியா செல்ல முயன்ற 5 பேரை கடற்படையினர் கைதுசெய்து நேற்று முன்தினம் (18) தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இவர்களில் 3 ஆண்களும் 2 பெண்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் பேசாலை, வவுனியா மற்றும் திருகோணமலை போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.

குறித்த 5 பேரும் விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் (18) மாலை தலைமன்னார் பொலிஸாரால் மன்னார் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது 18 வயதிற்கு மேற்பட்ட 4 பேரை எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டதோடு, 16 வயது சிறுமியை சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஊடாக சிறுவர் காப்பகத்தில் ஒப்படைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை களை தலைமன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழில். பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து மாவா விற்றவர் கைது

(யாழ். நிருபர்)

பாடசாலை மாணவர்களை இலக்குவைத்து கஞ்சா கலந்த மாவா போதைப் பாக்கை விற்பனை செய்து வந்தநபர் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 3.5 கிலோ கிராம் எடையுடைய கஞ்சா கலந்த மாவா போதைப் பாக்கை கைப்பற்றியுள்ளதாகவும், குறித்த நபர் நீண்ட காலமாக மாணவர்களை இலக்குவைத்து போதைப் பாக்கு விற்பனையில் ஈடுபட்டு வந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபரை யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# “பாண் விற்பனை விலையில் மாற்றம் ஏற்படாது”

## யாழ். கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பாண் விற்பனை விலையில் மாற்றம் ஏற்படாது - என யாழ். மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உற்பத்தியாளர் சங்கத் தலைவர் க.குணரட்ணம் தெரிவித்தார்.

450 கிராம் பாண் ஒன்றின் விலை பத்து ரூபாவால் குறைக்கப்படும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. இந்நிலையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் பாண் விற்பனை விலை தொடர்பாக கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் பாணின் விற்பனை விலை 250 ரூபா வரை விற்கப்படுகிறது. அதனால் அவர்கள் பத்து ரூபா குறைத்து தற்போது விற்பனை செய்வதாக அறிவித்துள்ளனர். ஆனால், நாங்கள் யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே பாணை 200 ரூபாவுக்கு விற்கும்போது அதிலிருந்து பத்து ரூபா குறைப்பதென்பது முடியாத காரியமாகும். ஆகவே இதனை பொதுமக்கள் விளங்கிக்கொள்ள வேண்டும் - என்றார்.

# ஆறுமுகநாவலர் அவதரித்து 200 ஆண்டு நிறைவு மாநாடு யாழில்





ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவதரித்து 200 ஆண்டு நிறைவு மாநாடு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, யாழ்.மாநகர சபை சமய விவகாரக் குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டிலும் யாழ்ப்பாணம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்திலே ஆன்மிக அரங்கின் தொடக்க நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை குருபூஜை நிகழ்வுகளோடு ஆரம்பமாகி நேற்று முன்தினம் மாலை இறுதி நிகழ்வுகள் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் நாவலர் பெருமானின் நினைவாக சமூக செயற்பாட்டாளர் களுக்கு நாவலர் விருதும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதியின் இந்து சமய விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி ராமச்சந்திரன் பாபு சர்மா குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சர்வதேச இந்து குருமார் ஒன்றியத் தலைவர் து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய.அநிருத்தனன், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், சமயப் பெரியார்கள், கல்விமான்கள், அறநெறிப் பாடசாலை சமூகத்தினர், பல்கலைக்கழக சமூகத்தினர் எனப் பலரும் பங்கெடுத்திருந்தனர்.

# இரு இ.போ.ச பஸ்கள் மோதி 15 பேர் படுகாயம்




(இராகலை நிருபர்)

வலப்பனை கீர்த்தி பண்டாரபுர வழியினூடாக செல்லும் கண்டி-பண்டாரவளை பிரதான வீதியின் ஹங்குராங்கெத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லெமசூரிய பகுதியில் நேற்று முன்தினம் (18) மாலை இடம்பெற்ற பஸ் விபத்தில் 15க்கும் அதிகமான பயணிகள் காயமடைந்துள்ளனர்.

கண்டியிலிருந்து ஹங்குராங்கெத்த வழியாக பதுளையை நோக்கியும் பண்டாரவளையிலிருந்து அதே வழியில் கண்டியை நோக்கியும் பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான இரண்டு பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து இடம்பெற்றபோது இவ்விரு பஸ்களிலும் பயணித்த பயணிகளில் 15 பேர் பலத்த காயங்களுடன் கீர்த்தி பண்டாரபுர கொக்கதென்ன பிரதேச வைத்தியசாலைக்கும் சிறிய காயங்களுக்குள்ளான ஒரு சிலர் வலப்பனை பிரதேச வைத்தியசாலைக்கும் அழைத்து செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் இரண்டு பஸ்களில் ஒன்றின், பின்பகுதி பலத்த சேதமாகியுள்ளதுடன் இந்த பஸ்ஸில் பின் ஆசனங்களில் அமர்ந்திருந்தவர்களுக்கே பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் ஹங்குராங்கெத்த மற்றும் வலப்பனை பொலிஸார் தெரிவித்தனர். இரு பஸ்களும் வேகக்கட்டுப்பாட்டை மீறியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் மேலதிக விசாரணைகளை தாம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# பல்கலை மாணவன் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதி

(கண்டி நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவன் ஒருவர் நேற்று முன்தினம் (18) தாக்கப்பட்டு காய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பேராதனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது குறித்து மேலும் தெரிய வருவதாவது,

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட சிரேஷ்ட மாணவன் ஒருவர் முதலாம் ஆண்டு கனிஷ்ட மாணவனைத் தாக்கியுள்ளதாகவும் காய மடைந்த மாணவன் பேராதனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சேர் ஜவன் ஜெனிஸ் விடுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இச்சம்பவத்தில் தாக்கப்பட்ட மாணவன் நோட்டன் பிரிட்ஜ் பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தாக்கிய மாணவன் யாழ். பிரதேசத்தைச் சேர்ந்த 4ஆம் ஆண்டு மாணவன் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். தான் சேர் ஜவன் ஜெனிஸ் விடுதியில் தங்கியிருந்த வேளையில் நால்வர் அங்கு வந்ததாகவும் அதில் ஒருவரே தன்னைத் தாக்கியதாகவும் பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாரும் பல்கலைக்கழக நிர்வாகத்தினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# பேராதனை பல்கலை விரிவுரையாளர் பணிப்பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(கண்டி நிருபர்)

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையாளர்கள் மேற்கொண்ட பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டதாக நேற்று முன்தினம் (18) அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த 13ஆம் திகதி முதல் தாம் மேற்கொண்ட தொழிற்சங்கப் போராட்டத்தை இடைநிறுத்துவதாக பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையாளர்கள் அறிவித்துள்ளனர்.

எனவே இவ்வாரம் முதல் வழமை போல் விரிவுரைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அத்துல சேனாரத்ன கடந்த வாரம் தாக்கப்பட்டமை தொடர்பாக நீதி விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கைகளைக் கோரியும் தமது பாதுகாப்பை உறுதிசெய்யுமாறும் நடந்த சம்பவத்திற்கு எதிர்ப்பைத் தெரிவித்தும் கலைப்பீட விரிவுரையாளர் சங்கம் மேற்படி பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை ஒரு வார காலத்திற்கு மேற்கொண்டது.

அதன்படி கடந்த 13ஆம் திகதி முதல் பரீட்சைப் பணிகள் உட்பட சகல விரிவுரை நடவடிக்கைகளிலும் இருந்து ஒதுங்கியிருந்தனர். இதேவேளை, பேராசிரியர் அத்துல சேனாரத்ன தாக்குதல் தொடர்பாக இதுவரை 12 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.



**கண்டி உடிஸ்பத்துவ ஆயுர்வேத மத்திய மருந்தகம் மற்றும் சமூக வைத்திய காரியாலயம் என்பன பொதுமக்கள் பாவனைக்காக நேற்று முன்தினம் (18) கையளிக்கப்பட்டது. 160 இலட்சம் ரூபா செலவில் இது அபிவிருத்தி செய்யப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். பிரதேசத்திற்குப் பொருத்தமான ஆயுர் வேத மூலிகைகள் மற்றும் போசாக்கு உணவுகள் பற்றியும் இங்கு விபரிக்கப்பட்டன. (கண்டி நிருபர்)**

# தொழில் பெற்றுத் தருவதாக பணமோசடி செய்தவர் கைது

(எம்.செல்வராஜா)

அரச துறையில் தொழில் பெற்றுத் தருவதாகத் தெரிவித்து, இளைஞர் - யுவதிகளை ஏமாற்றி, தபால் அலுவலகம் ஊடாக செயற்படுத்தப்படும் பி.எம்.டி. முறை மூலமாக நிதி மோசடி செய்த ஒருவர் பதுளையில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தொடர்பில் பதுளை, மஹியங்கனை மற்றும் ஹாலி-எல பொலிஸ் நிலையங்களுக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் பதுளை பிரதேச குற்றப்புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பண்டாரவளை பகுதியில் வசிக்கும் 46 வயதுடைய சந்தேக நபர் கடந்த கொரோனா தொற்றின்போது பதுளை பொது நூலகத்திற்கு வருகை தரும் நபர்களின் தகவல்களை பதிவு செய்ய வைத்திருந்த புத்தகத்தின் தாள்களை கிழித்து, அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இந்த தொலைபேசி உரையாடல்களின்போது, தொழில் இல்லாதவர்களுக்கு அரச தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி சந்தேக நபர் பணமோசடியில் ஈடுபட்டுள்ளமை தெரியவந்துள்ளது.



**தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் பதுளை எப்.ஐ.ஓ.எச் (FIOH) அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் (18) ‘வெறுக்கத்தக்க பேச்சுகள் மற்றும் அதனைத் தடை செய்தல்’ தொடர்பான தெளிவுபடுத்தல் செயலமர்வு பதுளை கிராண்ட் ரிஜன்சி விடுதியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட சர்வமத முக்கியஸ்தர்களையும் சமூக மேம்பாட்டாளர்களையும் படங்களில் காணலாம். (பதுளை நிருபர்)**

# நானு-ஓயா ஆற்றிலிருந்து சடலம் மீட்பு

(நுவரெலியா மேலதிக நிருபர்)

நானு-ஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நானு-ஓயா மாஹா-எலிய காட்டுப்பகுதியில் உள்ள ஆற்றிலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் (18) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் குறித்த பகுதிக்கு விறகு வெட்டச் சென்றவர்களால் துர்நாற்றம் வீசுவது அவதானிக்கப்பட்டு பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் குறித்த காட்டுப் பகுதிக்குச் சென்ற நானு-ஓயா பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் சடலமாக மீட்கப்பட்டவர் மனநலம் பாதிக்கப்பட்டு கடந்த ஒரு மாத காலமாக காணாமல் போனதாக தேடப்பட்டு வந்த சுமார் 51 வயது மதிக்கத்தக்க ஆண் எனவும் குறித்த சடலம் உருக்குலைந்த நிலையில் துர்நாற்றம் வீசுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட ஆதார பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதாக நானு-ஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

# மியன்மார் அகதிகளுக்கான உதவிகள் கடற்படையினரால் வழங்கிவைப்பு






வெற்றிலைக்கேணிக்கு வடக்கே சுமார் 3.5 கடல் மைல் தொலைவில் இலங்கைக் கடற்பரப்பில் பயணிகள் கப்பலில் இருந்த 104 மியன்மார் பிரஜைகளை இலங்கை கடற்படையினர் மீட்டு காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு அழைத்துவரப்பட்டனர்.

மியன்மாரிலிருந்து இந்தோனேசியாவிற்கு இவர்களை ஏற்றிச் செல்லும்போது இயந்திரக் கோளாறு ஏற்பட்டதைத் தொடர்ந்து (டிசம்பர் 17) இலங்கை கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்தது

கடல் கொந்தளிப்பான நிலையில், கடற்படையினர் கடும் முயற்சியை மேற்கொண்டு, இயக்கப்படாத படகிலிருந்து 104 மியன்மார் பிரஜைகளை மீட்டு, காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அழைத்துவரப்பட்டு அவர்களுக்கு கடற்படையினரால் உணவு, அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டன.




## Administrative Coordinator

Bnl o mx9@dpgmhw
@ookx9b qldq dpgmhw-bnl
@rrhrs msFdmdq kL m f dq(Ehm mbd), Bghde@bbnt ms ms, L m f dq(Rdbt dsx) Fq cd HH
Hhrshst shnme9RdhK mj K mc Cdudknol dms Bnqpnq shnm
@ookx9 Cdot sx F dmdq k L m f dq, RdhK mj K mc Cdudknol dms Bnqpnq shnm, Mn /2, Rdhl x v qcdm otq L v sg , V dkhj c , Q i f hqhx -
v v v -k mccdudknol dms-kj

## PhD Supervisor (Part Time)

Hhrshst shnme9M shnm kRbgnnkneAt rhmdrr L m f dl dms
Drrdmsh kBdqshdh 9Gnkc ogC hm sgd ehdkc nel m f dl dms nqnsgdq qdk sdc chrbhokhmdr, Oqdnq dwodqhdmbd hm sgd OgC rt odquhrhnm oqnbdrr, Dwbdkkdms ok mmhmf, nqf mhyhmf mc cdkhudqx rj hkkr-
@ookx9l ocr mral - b-kj

## Management Assistant

| | |
|---|---|
| Hhrshst shnme9 | Ot akhb T shkhshdr Bnl l hrrhnmneRdhK mj |
| Pt khehb shnme9 | FBD N. K, @ K, L hmhl t l nesgqdd xd qr neonrs-pt khehb shnm dwodqhdmbd hm rhl hk q b o bhsx- |
| @f d9 | Adknv 14 |
| @ookx9 | Ot akhb T shkhshdr Bnl l hrrhnmneRdhK mj , Kdudk/5, A mj neBdxknmL dqbg ms Snv dq 17, Rs-L hbgd kr Qn c, Bnknl an /2-/00 12815/6 |

## Junior Art Director

Bnl o mx9@v dkkqdot sdc l dch f dmbx hmRdhK mj - J dx Qdpt hqdl dmsr9
• B mchc sd rgnt kc g ud m t mcdqrs mchmf ne bqd shud cdrhfm& l o: k xnt s,
Rsqnmf rj hkkr v hsg cdrhfmrnesv qd, mc g ud sgd ahkhsx sn at hkc bqd shud mc
t mhpt d hcd r- G uhmf sgd ekdwhahkhsx sn c os sn bkhdms dwodbs shnmr mc g ud
sgd v hkkhmf mdrr sn v nqj v hsg shf gs cd ckhmdr hr l t rs-
Hhsdqdrsdc b mchc sdr b m ookx ax rdmchmf sgdhq BUr sn qdbqt hsl dmsabnmmdbsdc f l hk-bnl
Bnms bstr nm+83 665 260 023 +83 666217 012-
ABnmmdbsdc (Ous) Ksc
Mn9/6, Rj dknmF qcdmr,
Bnknl an /4-

## Director – Legal and enforcement / Director – Corporate Affairs

Hhrshst shnme9 Rdbt qhshdr mc Dwbg mf d Bnl l hrrhnmneRdhK mj
@ookx9Sgd Chqdbsnq F dmdq k, Rdbt qhshdr mc Dwbg mf d Bnl l hrrhnmneRdhK mj , Kdudk18, D r sSnv dq, V nqkc sq cd Bdmsqd, Dbgdknm Rpt qd, Bnknl an /o-

## Tea Quality Consultant

Bnl o mx9@mudq kkx & Rnmr Ous KSC
Pt khehb shnme9Cdf qdd, L hmhl t l o4 xd qr neDwodqhdmbd
@ookx9b qldq mudq kkx-bnl

## CAD Draftsman / 3D Designer

Bnl o mx9L M Gnl dr CdudknodqOus-Ksc-,Q i f hqhx - Qdpt hqdl dms94 d qr Dwodqhdmbd v hsg L DO-
Bnms bs9/65/848141, /65/848137
Dl hkk9hmenl moqnodqsx f l hk-bnl

## நேரத்துக்கு தூங்காமல் மகன் குழப்படி: 119 இலக்கத்தில் முறையிட்ட தாயார்!

# தம்புள்ளையில் சுவாரஸ்யம்

தரம் 3இல் கல்வி பயிலும் மகன் வீட்டில் குழப்படி செய்வதாக பொலிஸ் அவசர சேவை தொலைபேசி இலக்கமான 119இற்கு அழைப்பை மேற்கொண்டு தாயொருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

தம்புள்ளை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த முறைப்பாட்டுக்கமைய தம்புள்ளை பொலிஸ் நிலையத்தின் பொலிஸார் இருவர், இரவுவேளையில் சுமார் 15 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கும் முறைப்பாட்டாளரின் வீட்டை தேடிச் சென்றுள்ளனர்.

தங்களுடைய மோட்டார்சைக்கிளை நிறுத்திய பொலிஸார், ஹோர்ன் அடித்து கூப்பிட்டபோதும், சிறிதுநேரம் அந்த வீட்டிலிருந்து எவருமே வெளியே வரவில்லை.

வீட்டின் கதவை தட்டியபோது அந்த வீட்டின் கதவை திறந்துகொண்டு பெண்ணொருவர் வெளியே வந்துள்ளார்.

“பிள்ளையால் பெற்றோருக்கு கடுமையான தொந்தரவு என செய்யப்பட்ட முறைப்பாட்டை விசாரணைக்கு உட்படுத்துவதற்காக வந்துள்ளோம்” என பொலிஸார் இருவரும் அந்தப் பெண்ணிடம் தெரிவித்துள்ளனர்.

“ஐயோ, நன்றாகவே சுணங்கிவிட்டது. அந்தப் பிள்ளை இப்போது தூங்குகிறான். நான், பொலிஸுக்கு ஏழரை மணிக்கு கதைத்தேன். இப்போது நேரம் நள்ளிரவாகிறது” என அந்தப் பெண் பதிலளித்துள்ளார்.

எனினும், இந்த புதுமையான பிரச்சினை தொடர்பில் பொலிஸார் அந்தப் பெண்ணிடம் விசாரித்துள்ளனர்.

“என்னுடைய பிள்ளை தரம் 3இல் கல்வி பயிலுகின்றான். இரவு வேளையில் சீக்கிரமாக தூங்குமாறு அறிவுறுத்தியும் அந்த பிள்ளை தூங்குவதே இல்லை. தூக்கத்துக்குச் செல்லாமல் குழப்படியில் ஈடுபடுகிறான். மற்றைய பிள்ளைகளையும் தூங்க விடுவதே இல்லை. தந்தையையும் தூங்கவே விடுவதே இல்லை“ என அந்த தாய் தெரிவித்தார்.

இந்த வீட்டுக்கு பொலிஸார் செல்லும்போது நள்ளிரவை நெருங்கியிருந்தது என்பதால், இந்த பிள்ளை எத்தனை மணிக்கு தூங்கவேண்டுமென நீங்கள் அறிவுறுத்தியுள்ளீர்கள் என அந்தப் பெண்ணிடம் பொலிஸார் கேட்டுள்ளனர்.

மாலை 6.30 மணிக்கு அந்தப் பிள்ளை தூக்கத்துக்குச் செல்லவேண்டும். சாப்பாட்டை ஊட்டிவிட்டு அந்தப் பிள்ளையை நித்திரைச் செல்லுமாறு கூறினேன். பிள்ளை தூங்கமாட்டான். அவனை மிரட்டி தூங்க வைப்பதற்காக பொலிஸாரை அழைப்பதற்கே அழைப்பை ஏற்படுத்தினேன் என்றும் அந்தப் பெண் பதிலளித்துள்ளார்.

அந்த தாய்க்கு கடுமையான அறிவுரைகளை வழங்கிய பொலிஸார், இவையெல்லாம் சிறிய பிரச்சினைகளாகும். பொலிஸாரின் நேரத்தையும் பொதுமக்களின் பணத்தையும் நாசம் செய்யாது. இனிமேலும் இவ்வாறு தேவையில்லாத முறைப்பாடுகளை செய்யாமல் இருக்குமாறு கூறிவிட்டு பொலிஸார் இருவரும் அங்கிருந்து இரவோடு இரவாக பொலிஸ் நிலையத்துக்கு கிளம்பிவிட்டனர்.

# இந்திய - இலங்கை மன்றம் திட்ட முன்மொழிவுகளுக்கு அழைப்பு

INDIA - SRI LANKA FOUNDATION

பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் கலாசார ரீதியான ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் ஊடாக இந்திய-இலங்கை உறவுகளை வலுவாக்குதல், இரு நாடுகளினதும் மக்களிடையிலான புரிந்துணர்வை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்காக இந்திய - இலங்கை மன்றமானது இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் 1998ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது.

இந்நிலையில், கலை கலாசாரம், கல்வி, விவசாயம், ஆராய்ச்சி, விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், சுகாதாரம், சமூகசேவை, அபிவிருத்திக் கற்கைகள் மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றை உள்ளடக்கிய துறைகளில் இந்திய - இலங்கை மன்றம் திட்ட முன்மொழிவுகளுக்காக அழைப்பு விடுத்துள்ளது.

மேலே கூறப்பட்டிருக்கும் விடயங்களில் இந்தியா மற்றும் இலங்கையிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி மற்றும் ஏனைய ஆராய்ச்சி செயற்பாடுகளை முன்னெடுத்தல், மாணவர்கள், புலமையாளர்கள், கலைஞர்கள், தொழில்நிபுணர்கள் மற்றும் அரங்க கலைஞர்கள் உட்பட்ட தரப்பினருக்கான விஜயங்கள் மற்றும் பரிமாற்றங்கள், கருத்தரங்குகள் மாநாடுகள், கண்காட்சி, திரைப்பட விழா, கலாசார நிகழ்வுகள் மற்றும் பயிலமர்வுகள் போன்றவற்றில் பங்கேற்றல், இவ்வாறான விடயங்களில் இந்திய - இலங்கை உறவுகள் குறித்த ஆராய்ச்சி செயற்பாடுகளின் முடிவுகளை பிரசுரித்தல், இந்திய மொழிகளிலுள்ள இலக்கிய படைப்புகளை இலங்கை மொழிகளிலும் அதேபோல இலங்கை மொழிகளில் உள்ளவற்றை இந்திய மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிடல் அடங்குகின்றன.

2023 மார்ச்சில் நடைபெறவிருக்கும் இந்திய-இலங்கை மன்ற பணிப்பாளர் சபையின் அமர்வின்போது இந்த முன்மொழிவுகள் குறித்து தீர்மானிக்கப்படவுள்ளதுடன், முன்மொழிவுகளை தனிநபராகவோ, நிறுவனங்களாகவோ அல்லது குழுக்களாகவோ சமர்ப்பிக்கமுடியும்.

இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் இணையத்தளம் (www..hcicolombo.gov.in) மூலமாக விண்ணப்பப்படிவங்களை பதிவிறக்கம் செய்து அவற்றை பூரணமாக நிரப்பி திட்ட முன்மொழிவுகளுடன் 2023 ஜனவரி 26ஆம் திகதிக்கு முன்னதாக பின்வரும் எமது முகவரிக்கு அல்லது ஈ-மெயில் முகவரிக்கு அனுப்பிவைக்க கேட்கப்பட்டுள்ளனர்.

INDIA-SRI LANKA FOUNDATION , C/o. High Commission of India , 36-38, Galle Road, Colombo 3 , Phone: +94 11 2389924 E-mail: islfcolombo2@gmail.com

# வியட்நாமில் உயிரிழந்த சாவகச்சேரி குடும்பஸ்தரின் உடல் நல்லடக்கம்



கனடாவிற்கு சட்ட விரோதமாக படகின் மூலம் சென்று உயிரிழந்தவரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

சட்டவிரோதமாக படகு மூலம் கனடா செல்ல முயற்சித்தபோது, படகு பழுதடைந்த நிலையில், கடந்த மாதம் 08 ஆம் திகதி 303 அகதிகளும் வியட்நாமிற்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

இவ்வாறு வியட்நாம் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் இருவர், தங்களை நாட்டுக்கு திருப்பி அனுப்பவேண்டாம் என தெரிவித்து கடந்த மாதம் 18 ஆம் திகதி தற்கொலைக்கு முயற்சித்தனர்.

இருவரும் வியட்நாமிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த 37 வயதான சுந்தரலிங்கம் கிரிதரன் உயிரிழந்தார்.

உயிரிழந்த சாவகச்சேரி, கல்வயல் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சுந்தரலிங்கம் கிரிதரனின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் அவரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று சாவகச்சேரி கண்ணாடிப்பெட்டி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.




சிறுவர்களுக்கு ஊட்டச்சத்து உணவு வழங்கப்பட வேண்டும் என்ற வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலணியின் ஏற்பாட்டில் நாட்டின் பல பாகங்களிலும் சிறுவர்களுக்கு பிஸ்கட் மற்றும் சிப்ஸ் பக்கற்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது. இத்திட்டத்தில் கொழும்பிலும் பல இடங்களிலும் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. கொழும்பு சென்றல் வீதியில் அமைந்துள்ள மஹ்றூப் சிறுவர் பூங்காவில் வைத்து கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் எம்.ரி.இக்பால் தலைமையில் முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்காவின் பங்குபற்றுதலுடன் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறார்களுக்கு பிஸ்கட் மற்றும் சிப்ஸ் பக்கற்கள் இலசமாக வழங்கப்பட்டன. (ஏ.எஸ்.எம்.ஜாவித்)





ஆதி ஐயப்ப தீர்த்த யாத்திரை மன்றம், ஸ்ரீ ஐஸ்வரிய ஐயப்பன் ஷேத்திரம் வருடாந்தம் நடத்தும் ஸ்ரீ கருப்பண்ண சுவாமியின் வீதியுலா நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை ராமதாஸ் குருசாமி தலைமையில் கொழும்பு ஜிந்துப்பிட்டி கன்னாரத்தெருவில் அமைந்துள்ள ஆதி ஐயப்ப தீர்த்த யாத்திரை மணடபத்திலிருந்து ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.




# 106 பேருடன் நடுக்கடலில் மூழ்கிய தாய்லாந்து கடற்படை போர்க் கப்பல்

## 73 பேர் உயிருடன் மீட்பு; 33 பேர் மாயம்

தாய்லாந்து கடற்படைக்குச் சொந்தமான போர்க் கப்பலொன்று புயலால் கடலில் மூழ்கி, கப்பலில் பயணித்த 106 கடற்படை வீரர்களில் 73 பேர் மீட்கப்பட்டுள்ள நிலையில், 33 பேர் காணாமல் போயுள்ளனர்.

தாய்லாந்து கடற்படைக்குச் சொந்தமான போர்க் கப்பலொன்று 106 கடற்படை வீரர்களுடன் தாய்லாந்து வளைகுடா பகுதியிலுள்ள கடற்பகுதியில் நேற்றுமுன்தினம்



(18) நள்ளிரவு வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தது.

அப்போது, கடலில் திடீரென புயல் காற்று வீசியதால் கடல் சீற்றமும் ஏற்பட்டுள்ளது. இதனால், போர்க் கப்பலில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மேலும், கப்பலுக்குள் கடல் நீர் புகுந்துள்ளது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் கப்பலில் புகுந்த கடல்நீரை வெளியேற்ற கடற்படை வீரர்கள் முயற்சித்தும் முடியாதுபோயுள்ளது. கடல் நீர் அதிகளவில் புகுந்ததால் நடுக்கடலில் கப்பல் மூழ்கத் தொடங்கியுள்ளது. போர்க் கப்பலிலிருந்த வீரர்கள் உட்பட அனைவரும் கடலுக்குள் வீழ்ந்துள்ளனர்.

இது குறித்து தகவலறிந்த கடற்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த மீட்புப் பணியின்போது போர்க் கப்பலிலிருந்த 75 பேர் மீட்கப்பட்டுள்ளனர். ஆனாலும், கடலில் மூழ்கிய 33 பேர் மாயமாகினர். இதையடுத்து, காணாமல்போயுள்ளவர்களைத் தேடும் பணியை மீட்புக்குழுவினர் முழுவீச்சில் முன்னெடுத்து வருகிறன்றனர். தேடுதல் நடவடிக்கைகளில் மூன்று கடற்படை கப்பல்களும், இரண்டு ஹெலிகொப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.



# திருமதி உலக அழகி



2022ஆம் ஆண்டுக்கான திருமதி உலக அழகி பட்டத்தை இந்தியாவைச் சேர்ந்த சர்கம் கவுசல் தட்டிச் சென்றுள்ளார்.



திருமணம் முடிந்த பெண்களுக்கான உலக அழகி போட்டி கடந்த 1984ஆம் ஆண்டுமுதல் நடந்து வருகிறது. அமெரிக்காவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இவ்வாண்டுக்கான போட்டியில் சர்கம் கவுசல், திருமதி உலக அழகி பட்டம் வென்றார்.

இதன்மூலம் பட்டம் வென்று தந்து 21 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியாவுக்கு அவர் பெருமை சேர்த்துள்ளார்.

ஜம்மு மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த சர்கம், ஆங்கில இலக்கியத்தில் முதுகலை பட்டப்படிப்பு படித்துள்ளார். விசாகப்பட்டினத்தில் ஆசிரியையாக பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

# இலங்கையை நோக்கி நகரும் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி

## தமிழக - மன்னார் வளைகுடா பகுதிக்குள் நுழைய வேண்டாம் என மீனவர்களுக்கு எச்சிரிக்கை

இலங்கை அருகே, இந்திய பெருங்கடலை ஒட்டிய வங்க கடல் பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளது. இது, இலங்கையை நோக்கி நகர்ந்து வருகிறது.

இந்திய பெருங்கடலையொட்டிய பகுதியில் உருவாகியுள்ள இந்த காற்றழுத்த தாழ்வானது, படிப்படியாக வடக்கு நோக்கி நகர்ந்து, இலங்கை மற்றும் மன்னார் வளைகுடா அருகில் வரும். இலங்கையின் கிழக்கு பகுதி வழியே இப்புதிய காற்றழுத்த தாழ்வுபகுதி இலங்கைக்குள் ஊடுருவவுள்ளது.

அதேவேளை, தமிழகத்தையொட்டிய வங்க கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசும். கடல் சீற்றத்துடன் காணப்படும் என சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. மீனவர்கள் இன்று, கடற்பகுதி அருகே செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாளை 21ஆம் மற்றும் நாளைமறுதினம் 22ஆம் திகதிகளில் இலங்கையையொட்டிய தமிழகப் பகுதிகள் மற்றும் மன்னார் வளைகுடா சுற்றுப்புற பகுதிக்குள் நுழைய வேண்டாம் என மீனவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

# உக்ரைன் மீது ரஷ்யா தொடர் ஏவுகணை தாக்குதல்: தீப்பற்றி எரியும் பாக்முட் நகரம்

உக்ரைனின் பாக்முட் மற்றும் கெர்சன் ஆகிய நகரங்கள் மீது ரஷ்யப் படைகள் பொழிந்த ஏவுகணை மழையால், ஏராளமான கட்டங்கள் தீப்பற்றி எரிந்து, அந்நகரமே புகை மண்டலமாக காட்சியளிக்கிறது.

உக்ரைனின் பாக்முட் நகரம் மீது ரஷ்யப் படைகள் பொழிந்த ஏவுகணை மழையால் ஏராளமான கட்டங்கள் தீப்பற்றி எரிந்து, அந்நகரமே புகை மண்டலமாக காட்சியளிக்கிறது.



ரஷ்ய கட்டுப்பாட்டிலுள்ள டோனட்ஸ்க் (Donetsk) மற்றும் லுகான்ஸ்க் (Luhansk) பிராந்தியங்களை இணைப்பதுடன், உக்ரைனின் பல்வேறு மாகாணங்கள் மீதும் தாக்குதல் நிகழ்த்த முடியும் என்பதால் புவியியல் முக்கியத்துவம் வாய்ந்த பாக்முட் நகரை கைப்பற்ற ரஷ்யப் படைகள் மாதக்கணக்கில் போராடிவருகின்றன.

இருந்தபோதும், உக்ரைன் இராணுவம் பெரியளவில் பின்வாங்காமல் எதிர் தாக்குதல் நடத்தி வருகின்றது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இப்போர் இன்று 299 நாட்களைக் கடந்து 10ஆவது மாதத்தை நெருங்குகிறது.

கடந்த மாதம், உக்ரைனின் அதிரடித் தாக்குதலால் ரஷ்ய வீரர்கள் கெர்சன் நகரிலிருந்து பின்வாங்க நேரிட்டது. இது ரஷ்யாவுக்கு பெரும் பின்னடைவாக கருதப்படுகிறது. இதைத் தொடர்ந்து கெர்சன் மீதான தாக்குதலை ரஷ்யா தீவிரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் கெர்சன் நகரின் முக்கிய பகுதிகளில் ரஷ்யப் படையினர் குண்டுமழை பொழிந்து தாக்குதல் நடத்தினர். இதில் 3 பேர் காயமடைந்தனர். இதுவரை, இப்பகுதியில் ரஷ்யா 54 தாக்குதல்கள் நடத்தியிருப்பதாக உக்ரைன் நிர்வாகம் தெரிவித்தது.

இதனிடையே, ரஷ்யாவின் பெல்கோரோட் பிராந்தியத்தில் உக்ரைன் படையினர் நடத்திய தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் 8 பேர் காயமடைந்திருப்பதாகவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

# மூதூர் அல்லை நகர்ப் பகுதியில் அடை மழை

## வீடுகள் – வீதிகள் நீரில் மூழ்கின



(மூதூர் நிருபர்)

மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அல்லை நகர் மேற்கு, அல்லை நகர் கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தொடர்ச்சியாக பெய்துவரும் அடை மழை காரணமாக பல வீடுகள், வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் அப்பகுதி மக்கள் அன்றாட செயல்பாடுகளில் பல அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

மேலும் உரிய அதிகாரிகள் வடிகால்களை தோண்டி சீரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்

# நீலையூர் சுதாவின் 'கிடுகு வீடு' நூல் அறிமுகம்



(நிந்தவூர் நிருபர்)

நண்பர்கள் வட்டத்தினால் நீலையூர் சுதாவின் 'கிடுகு வீடு' நூல் அறிமுகவிழா கடந்த சனிக்கிழமை கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையில் மட்டக்களப்பு மகஜனாக் கல்லூரி மண்டபத்தில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண உதவி முகாமையாளர் சுவாமி சுராச்சிதானந்தரின் ஆசீர்வாதத்துடன் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறிப்பினர்களான சீ.யோகேஷ்வன், கி.துரைராசசிங்கம், அலிசாகிர் மௌலானா, முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரெத்தினம், பிரசன்னா, பிரசாந்தன் ஆகியோர் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

கி.கிருபைராசாவினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டதைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தரால் தலைமையுரை ஆற்றப்பட்டது. மேலும் தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கா.கோமதிராஜ் நூலாசிரியர் பற்றிய உரையையும் மட்டக்களப்பு கல்லடி சிவானந்த வித்தியாலய ஆசிரியர் கி.குமாரசிங்கம் நூல் அறிமுக உரையையும் ஓய்வுநிலை அதிபர் திருமதி சிவமணி நற்குணசிங்கம் நூல் நயவுரையையும் ஆற்றினார்கள்.

அத்துடன், மட்டக்களப்பு மகஜனா கல்லூரி மாணவர்களது நடன நிகழ்வும் அதிதிகள் உரையும் இடம்பெற்று இறுதியில் நூல் அறிமுக விழா நடைபெற்றது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்தார் காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் பஸ்மீர்



(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது நகர சபை கோரிக்கையை முன்வைத்து சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசல் தலைமையிலான மக்கள் பணிமனை சார்பில் கடந்த காரைதீவு பிரதேச சபைத் தேர்தலில் தோடம்பழ சின்னத்தில் போட்டியிட்டு வென்ற சுயேட்சைக் குழு உறுப்பினர் ஏ.ஆர்.முஹம்மட் பஸ்மீர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்துகொண்டார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர பிரதி முதல்வரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஒருங்கிணைப்பாளருமான ரஹ்மத் மன்சூர், காரைதீவு பிரதேச சபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மாளிகைக்காடு அமைப்பாளருமான எம்.எச்.எம்.இஸ்மாயில் உட்பட அக்கட்சியின் பிரதேச முக்கியஸ்தர்களும், பஸ்மீரின் ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மாளிகைக்காடு பிரதேச அமைப்பாளராக இருந்துவந்த நிலையிலேயே அவர் சாய்ந்தமருது நகர சபை கோரிக்கையை முன்வைத்து, சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலின் தலைமையிலான மக்கள் பணிமனை சார்பில் கடந்த காரைதீவு பிரதேச சபைத் தேர்தலில் தோடம்பழ சின்னத்தில் போட்டியிட்டு மாளிகைக்காடு மேற்கு வட்டார மு.கா. வேட்பாளர் எம்.எச்.எம்.இஸ்மாயிலை தோற்கடித்து வெற்றிபெற்றிருந்தார்.

சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலின் தலைமையிலான மக்கள் பணிமனையினரின் ஓரவஞ்சக செயற்பாடுகள் காரணமாக அந்த அணியிலிருந்து விலகியிருந்த நிலையிலேயே மு.காவில் தன்னை இணைத்துக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தனது மனைவியை மண்வெட்டிப் பிடியால் தாக்கி கொலைசெய்த கணவன் மட்டு. கரடியனாறில் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள கருப்பிடமலை நெவுண்டலியாடு வயல் பிரதேசத்தில் மது போதையில் மனைவியை மண்வெட்டிப் பிடியால் அடித்துக் கொலைசெய்த கணவனை கைதுசெய்துள்ள சம்பவம் நேற்று முன்தினம் (19) இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கரடியன் குளத்தைச் சேர்ந்த 28 வயதுடைய 3 பிள்ளைகளின் தாயாரான ஜெயக்குமார் புவனேஸ்வரி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த வயல் பிரதேசத்தில் வேளாண்மை செய்துவரும் விவசாயி ஒருவரின் வயலுக்கு வேளாண்மை காவலுக்கு அமர்த்தப்பட்ட கரடியன்குளத்தைச் சேர்ந்த 3 பிள்ளைகளை கொண்ட வல்லிபுரம் ஜெயக்குமார், அவரது 10 வயதான மூத்த பிள்ளையை அவரது அம்மம்மாவுடன் தங்கவைத்துவிட்டு, அவரது மனைவி மற்றும் 5, 3 வயது குழந்தைகளுடன் வயலில் காவலுக்காக அமைக்கப்பட்ட குடிசையில் தங்கியிருந்து வேளாண்மை காவல் காத்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு வல்லிபுரம் ஜெயக்குமார், அவரது மனைவி ஆகிய இருவரும் மது அருந்திய நிலையில், இருவருக்குமிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றி சண்டையாக மாறியதையடுத்து, அங்கிருந்த மண்வெட்டிப் பிடியினால் மனைவி மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளார். மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து மனைவிமீது தாக்குதல் மேற்கொண்ட 35 வயதுடைய வல்லிபுரம் ஜெயக்குமார் கைதுசெய்யப்பட்டதுடன், சம்பவ இடத்திற்கு தடயவியல் பொலிஸ் பிரிவினர் சென்று விசாரணைகளை மேற்கொண்டுவருவதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நீதிமன்ற அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# அம்பாறை ஒலுவில் பல்கலை மாணவர்களுக்கு போதைப்பொருள் விநியோகித்தவர் கைது

## பெருமளவிலான போதைப்பொருட்கள் மீட்பு

(கனகராசா சரவணன்)

அம்பாறை, ஒலுவில் பிரதேசத்தில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு போதைப்பொருள் விநியோகித்து வந்த வியாபாரியின் வீட்டை நேற்று முன்தினம் (18) மாலை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்து கஞ்சா தூள் மற்றும் மாவா போதைப்பொருளை பெருமளவில் மீட்டதுடன், போதைப்பொருள் வியாபாரியை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.எம்.பண்டார விஜயதுங்கவின் வழிகாட்டலில் பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சப்இன்பெஸ்டர் பீரதன் தலைமையிலான குழுவினர் சம்பவதினத்தன்று மாலை 5 மணிக்கு ஒலுவில் பிரதேசத்திலுள்ள போதைப்பொருள் வியாபாரியின் வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கி வியாபாரத்தில்



ஈடுபட்டிருந்த 41 வயதுடைய வியாபாரியை கைதுசெய்ததுடன், கஞ்சா மற்றும் புகையிலை கலந்த 300 கிராம் தூள், மாவா என்றழைக்கப்படும் ஒன்றரை கிலோ போதைப்பொருள் மற்றும் கஞ்சாவை புகைப்பதற்காக பயன்படுத்தப்படும் ஓ.சி.பி. என்ற பொருள் 30 பெட்டி என்பவற்றை மீட்டுள்ளனர்.

இதில் கைதுசெய்யப்பட்ட வியாபாரி இந்த போதைப்பொருளை நீண்டகாலமாக அந்தப் பகுதியிலுள்ள பல்கலைக்கழகத்தில் கற்றுவரும் மாணவர்களுக்கு வியாபாரம் செய்து வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதுடன், இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டு. மாநகர சபையால் சுற்றுலாத் துறையை மேம்படுத்த படகு சவாரித் திட்டம் அறிமுகம்

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு மாநகர சபையினால் சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்களில் படகுச் சவாரி மூலமாக உள்ளூர் வர்த்தகத்தை

இதன்போது கிராமங்களிலுள்ள துறைமுகங்களில் உள்ளூர் வியாபாரிகள் சிற்றுண்டி மற்றும் உணவு உட்பட வியாபார நிலையங்களை அமைப்பதன் மூலம் கிராமியப்





ஊக்குவிக்கும் வகையில் செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

தற்போது குறித்த படகுச் சவாரிக்கான முன்னோட்டத்தை உணவக விடுதிகள் உரிமையாளர் சங்கத்தினருடன் இணைந்து முன்னெடுப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்தப் படகுச் சவாரி மூலமாக மட்டக்களப்பு வாவியினூடாகக் கிராமங்களிலுள்ள துறைகளுக்குப் பயணித்து, அங்கு பொழுதைக் கழித்து, மீண்டும் படகுச் சவாரியைத் தொடரவும், சுற்றுலாப் பயணிகளுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளது.

பொருளாதாரத்தை மேலும் விருத்தியடையச் செய்ய முடியும்.

இவ்வாறு பயணிப்பதன் மூலமாக இயற்கை ரம்மியமான காட்சிகளையும், தெளிந்த நீரோட்டத்தில் குளிர்ந்த காற்றையும் சுவாசித்து, உள்ளூர் கிராமிய உணவின் சுவையையும் உணர்ந்துகொள்ளச் சுற்றுலாப் பயணிகளுக்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மின்சாரம் தாக்கி மாடுகள் உயிரிழப்பு; வாழைச்சேனை – நாவலடியில் சம்பவம்!



(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை - நாவலடியில் மின்சாரம் தாக்கி மாடுகள் உயிரிழந்துள்ள சம்பவம் நேற்று (19) திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

நாவலடி இன்ஷாஅியா வீதி தக்வாப் பள்ளிக்கு அருகில் வைத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் இருந்த மரமொன்று பிரதான மின் கம்பியில் முறிந்து விழுந்ததில் மின் கம்பி அறுந்துள்ளது.

இதனால், அந்தப் பகுதியில் மேய்ந்து திரிந்த மாடுகளில் இரண்டு மாடுகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளன.

இச்சம்பவத்தில் அப்பகுதியால் சென்ற நபரொருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக இலங்கை மின்சார சபையின் வாழைச்சேனை கிளைக்கு அறிவித்தபோதும் சபை ஊழியர்கள் தாமதித்தே வருகை தந்ததாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**புலிகளிட வேலைத்திட்டத்தை சுமந்திரனும், சாணக்கியனும் முன்னெடுப்பதாகக் கூறி சில மோட்டு சிங்களவங்கள் சுவிஸ் தூதரகத்துக்கு முன்னால ஆர்ப்பாட்டம் நடத்தினாங்க எலுவா..?**

**அடே அவங்க எப்பயாவது புலிகள உச்சரித்த சரித்திரம் இவங்களுக்கு அறவே இல்ல. சிங்கத்திட வேலத்திட்டத்த முன்னெடுக்கிறவங்கள பற்றி இப்படி சொன்னதே மகா தவறு எலுவா..?**

**இதுவும் ஒரு திட்டமிட்ட நாடகம் போலதான் விளங்கிது நான் சொல்லுறது மெய் எலுவா..?**

# கட்டுத்துவக்கு வெடித்ததில் வயோதிபர் காயம்

(அப்துல்சலாம் யாசீம்)

வயலுக்கு காவலுக்குச் சென்ற வயோதிபர் மிருகங்களுக்கு கட்டப்பட்டிருந்த கட்டுத் துவக்கில் சிக்கி படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வனர்த்தம் கடந்த சனிக்கிழமை (17) 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது படுகாயமடைந்தவர் கோமரங்கடவல - தல்கஸ்வெவ பகுதியில் வசித்துவரும் மூன்று பிள்ளைகளின் தந்தையான எம்.ஜீ.நந்தசேன (70 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்து மாலை 5 மணியளவில் வயலுக்கு பக்கத்து வயல்காரருடன் சென்று கொண்டிருந்தபோது, மிருகங்களுக்கு வைக்கப்பட்டிருந்த வெடி வெடித்த நிலையில், கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில், குறித்த வயோதிபரின் வலது கால் மற்றும் கைகளில் பலத்த காயங்கள் ஏற்பட்டதுடன், மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் வைத்திய சாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் கோமரங்கடவல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மந்த போசனையுடைய குழந்தைகளுக்கு பால்மா பக்கற்றுகள் வழங்கிவைப்பு

(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட மந்த போசனையுடைய குழந்தைகளுக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான பால்மா பக்கற்றுகள் வழங்கப் பட்டன.



தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதி தலைமையில் நேற்று (19) பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் அங்கர் நிறுவனம் ஊடாக ஒருவருக்கு தலா 400 கிராம் பெறுமதியான இரு பக்கற்றுகள் வீதம் 91 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன.



பிள்ளைகளின் வளர்ச்சி, மந்தபோசனை தொடர்பில் இணங்காணப்பட்ட நிலையில், இது உரியவர்களுக்கு வழங்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் மலர்விழி, திஸ்ஸபுர இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி மேஜர் என்.சி.மாரசிங்க மற்றும் தாய்மார்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# தென்கிழக்கு வங்கக் கடலில் காற்றழுத்தம் காரணமாக இடியுடன் கூடிய கன மழையுடன் பலத்த காற்றும் வீசும்

## மக்களை அவதானமாக இருக்குமாறு வளிமண்டலவியல் திணைக்கள மட்டு. மாவட்ட பணிப்பாளர் சுப்பிரமணியம் ரமேஷ் அறிவிப்பு

(கனகராசா சரவணன்)

தென்கிழக்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத்தால் அதே பகுதியில் தொடர்ந்தும் காணப்படுகின்றது. இது மேற்கு நோக்கி நகர்ந்து தென்மேற்கு வங்கக் கடலை அடையக்கூடிய வாய்ப்பு காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழைபெய்யக் கூடும். நாட்டின் கடற்பரப்புகளில் காற்றானது வடகிழக்கு திசையிலிருந்து வீசும் வேகமானது 30 தொடக்கம் 40 கிலோ மீற்றர் வரை வீசக்கூடும்.

திருகோணமலையிலிருந்து மட்டக்களப்பு பொத்துவில் ஊடாக ஹம்பாந்தோட்டை வரையிலான கடற்பரப்புகளிலும் காங்கேசன்துறையில் இருந்து மன்னார் மற்றும் புத்தளம் ஊடாக கொழும்புவரையான கடற்பரப்பில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலயத்திற்கு 50 தொடக்கம் 55



வீதம்வரை அதிகரித்து வீசக்கூடும்.

மேற்குறிப்பிட்ட கடற்பரப்புகள் அவ்வப் போது கொந்தளிப்பாக காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் ஓரளவுக்கு கொந்தளிப்பாக காணப்படும். இடியுடன் கூடிய மழையின்போது கடல் மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படுவதுடன், பலத்த காற்றும் வீசக்கூடும்.

தென்கிழக்கு வங்காள விரிகுடா மற்றும் தென்மேற்கு வங்காள விரிகுடாவின் ஆழ்கடல் பகுதிகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழையே பெய்யக்கூடும்.

எனவே, மேற்படி கடற்பரப்புகளில் கடல் நடவடிக்கைகளில் ஈடுபடும் கடற்படை மற்றும் மீனவர் சமூகங்களை அவதான மாக செயற்படுமாறு கேட்டுக்கொள்ளப்படு கின்றார்கள். இது தொடர்பில் வளிமண்டல திணைக்களத்தால் வெளியிடப்படும் எதிர்கால முன்னறிப்புக்கள் சம்பந்தமாக அவதானமாக செயற்படுமாறு வேண்டிக்கொள்ளப் படுகின்றார்கள்.

இந்த காற்றழுத்தம் பகுதி காரணமாக கிழக்கு ஊவா மற்றும் மத்திய மாகாணங் களில் பொலன்னறுவை மற்றும் அம் பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும். இப்பிரதேசங்களில் சில இடங்களில் 100 மில்லி மீற்றருக்கு அதிகமான கனமழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# திருக்கோவிலில் கஞ்சாவுடன் இருவர் கைது

(கோணாவத்தை நிருபர்)

திருக்கோவில் பொலிஸ்பிரிவில் கஞ்சாவுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

திருக்கோவில் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின்படி குறித்த பிரதேசங் களுக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபர்களை கைதுசெய்துள்ளதுடன், அவர்களிடமிருந்து கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட ஒரு நபரிடமிருந்து 2000 மில்லிகிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மற்றைய நபரிடமிருந்து 1700 மில்லி கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (17) ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 30ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கவிஞர் பாலமுனை பாறூக்கின் பாவேந்தல் பாடல்கள் நூல் வெளியீடு

(பாலமுனை நிருபர்)

பாலமுனை பிறைட் யூத் மற்றும் கலாசார அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் கவிஞர் பாலமுனை பாறூக்கின் 'பாவேந்தல் பாடல்கள்' நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (18) அட்டாளைச்சேனை சக்கி மண்டபத்தில் நடைபெற்றது.



அட்டாளைச்சேனை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் பாத்திமா நஜீஹா முஸாபிர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் அல்ஹாபிழ் என்.எம்.அப்துல்லாஹ் பிரதம அதிதியாகவும், பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறை பேராசிரியர் செ.யோகராசா, தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனிபா, பிரதேச சபை உறுப்பினர் ஏ.பி.பதுறுத்தீன், அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சட்டத்தரணி எம்.ஏ.அன்சில் தவிசாளர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாலமுனை அமைப்பாளர் ஏ.எல்.அலியார் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டார்.

மேலும் ஊடகவியலாளர்கள், அரச நிறுவனங்களின் தலைவர்கள்,



கலைஞர்கள், இலக்கியவாதிகள், அரசியல் பிரமுகர்கள் எனப் பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வில், நூலாசிரியருக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் ஒளிவிழா

(பாண்டிருப்பு நிருபர்)

பட்டிருப்பு வலயக் கல்வி பணிமனைக் குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வு வித்தியாலய அதிபர் க.செல்வராசா தலைமையில் நடைபெற்றது.

உலக மக்களை பாவங்களில் இருந்தும், சாபத்தில் இருந்தும் மீட்பதற்காக மனித அவதாரம் எடுத்து இயேசு கிறிஸ்து இப்பூமியில் பிறந்தார். அவரது பிறப்பின் மகிமையை உணர்த்தும் வகையில் ஒளிவிழா நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

மனிதர்களின் வாழ்க்கையில் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொண்டு வருவதோடு மட்டுமல்ல, சிறந்த மனிதர்களாக ஒவ்வொருவரும் வாழவேண்டும் என்பதை





இயேசு கிறிஸ்துவின் வருகை வலியுறுத்துகிறது.

கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தின் கிறிஸ்தவ பாட ஆசிரியை கொலின்ஸ் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜெயந்திமாலா கலந்துகொண்டார்.

அத்துடன், அருட்தந்தை நிர்மல் சூசைராஜ், போதகர்களான ஞானதாஸ், பஅருளாந்தம் நிரஞ்சன், காந்தன், கிரேஸ்கரன், பிரதி அதிபர்களான சண்முகநாதன், புவனேஸ்வரி உட்பட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இங்கு மாணவர்களினால் நத்தார் கீதம், இயேசு கிறிஸ்துவின் பிறப்பு நாடகம், நடனம் ஆகிய பல்வேறு ஆற்றுகைகள் நடைபெற்றன.

# 36 ஆண்டுகளின் பின் மீண்டும் உலக சம்பியனான ஆர்ஜென்ரீனா

ஏ.அகீல் சிஹாப்

22ஆவது பீபா உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் சம்பியனைத் தீர்மானிக்கும் இறுதியாட்டத்தில் பிரான்ஸை பெனால்டி ஷூட் அவுட்டில் வீழ்த்திய லியோனல் மெஸ்ஸி தலைமையிலான ஆர்ஜென்ரீன அணி சம்பியன் பட்டம் வென்றது. பீபா வரலாற்றில் மிகுந்த பரபரப்புடன் நடைபெற்ற இறுதிப் போட்டியாக நேற்று முன்தினம் கட்டாரின் லூசைல் மைதானத்தில் 88 ஆயிரத்து 966 ரசிகர்கள் முன்னிலையில் நடைபெற்ற ஆர்ஜென்ரீனா – பிரான்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டம் அமைந்தது.

போட்டியின் முதல் 90 நிமிடங்களில் இரு அணிகளும் இரு கோல்களை அடித்ததால் ஆட்டம் மேலதிக 30 நிமிடங்கள் வரை சென்றது. ட்விஸ்ட் மேல் ட்விஸ்டாக இந்த ஆட்டம் அமைந்தது. ஆட்டத்தின் முதல் 79 நிமிடங்கள் வரையில் ஆர்ஜென்ரீன அணி 2 கோல்கள் அடித்து முன்னிலையில் இருந்தது. இதன் பின்னர் 80 மற்றும் 82ஆவது நிமிடங்களில் பிரான்ஸின் எம்பாப்பே அடுத்தடுத்து கோல்களை அடிக்க, ஆட்டத்தின் பரபரப்பு அதிகரித்தது. 90 நிமிடங்களுக்குப் பின்னர் இரு அணிகளும் 2-2 என சமநிலையில் இருந்தன.

இதையடுத்து வழங்கப்பட்ட மேலதிக 30 நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல் அடித்தன. மெஸ்ஸியும் எம்பாப்பேவும் தங்களது அணிக்கு தலா ஒரு கோலை அடிக்க, சம்பியன் பட்டம் வெல்வது யார் என்பதை தீர்மானிக்க ஆட்டம் பெனால்டி ஷூட் அவுட்டுக்கு சென்றது.

**பெனால்டி ஷூட் அவுட்**

பெனால்டி ஷூட் அவுட்டில் முதல் கோலை பிரான்ஸ் அணிக்காக எம்பாப்பே அடித்து வைத்தார். அடுத்த கோலை ஆர்ஜென்ரீனாவுக்காக மெஸ்ஸி அடித்து அணிக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினார்.

2ஆவது ஷூட்டை பிரான்ஸ் வீரர் கொமன் அடிக்க முற்பட்டபோது ஆர்ஜென்ரீன கோல் கீப்பர் எமி மார்ட்டின்ஸ் தடுத்து நிறுத்தினார். ஆர்ஜென்ரீன தரப்பில் 2ஆவது ஷூட்டை டைபலா கோலாக்கியதால் ஆட்டம் 2-1 என்ற கணக்கில் ஆர்ஜென்ரீனா பக்கம் சாய்ந்தது.

3ஆவது ஷூட்டை பிரான்ஸ் வீரர் ஷோனமி தவறவிட, ஆர்ஜென்ரீனாவின் பாராரெஸ் அடித்த பந்து நேராக வலைக்குள் சென்றது. இப்போது 3-1 என அர்ஜென்ரீனா முன்னிலை வகித்தது.

4ஆவது ஷூட்டை பிரான்ஸின் கோலோ முவானி கோலாக்கி அணிக்கு நம்பிக்கையை ஏற்படுதினார். அதேவேளை ஆர்ஜென்ரீனாவின் மோன்டீலும் கோல் அடித்ததை தொடர்ந்து, ஆர்ஜென்ரீனா 4-2 என்ற கோல் கணக்கில் உலகக்கிண்ணத்தை வென்றது. இதன் மூலம் 1978 மற்றும் 1986ஆம் ஆண்டுகளில் சம்பியனான ஆர்ஜென்ரீனா 36 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் சம்பியன் பட்டம் வென்றது. நடப்பு சம்பியன் என்ற பெருமையுடன் களமிறங்கிய பிரான்ஸ், தொடர்ந்து அடுத்தடுத்து இரு சம்பியன் பட்டங்களை கைப்பற்ற எதிர்பார்த்தது. ஆனால், அதை ஆர்ஜென்ரீனா சீர்குலைத்தது.

இந்த உலகக்கிண்ணத் தொடரில் அபாரமாக ஆடிய லியோனல் மெஸ்ஸி மூன்று தங்கங்களை முத்தமிட்டார். அதிக கோல்கள் அடித்து தடம் பதித்த பிரான்ஸ் வீரர் எம்பாப்பே, தங்கக் காலணியை வென்று ஆறுதல் தேடிக்கொண்டார்.







போட்டியின் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய லியோனல் மெஸ்ஸி, மொத்தம் 7 கோல்கள் அடித்தார். அத்துடன், உலகக்கிண்ண வரலாற்றில் லீக் சுற்று, நொக்-அவுட், காலிறுதி, அரையிறுதி, இறுதிப் போட்டி என அனைத்து சுற்றுகளிலும் கோல் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை நிகழ்த்தினார்.

குறிப்பாக, உலகக்கிண்ணத்தில் 5 போட்டிகளில் ஆட்டநாயகன் விருது வென்ற ஒரே வீரர் என்ற மகத்தான சாதனையையும் படைத்தார். இதன் மூலம் கட்டார் உலகக்கிண்ணத்தில் சிறந்த வீரருக்கான தங்கப் பதக்கத்தை வென்றார். மேலும், சம்பியன் கிண்ணம், தங்கப் பதக்கம் உட்பட 3 தங்கங்களை உச்சி முகர்ந்தார் மெஸ்ஸி. மேலும், 2014ஆம் ஆண்டைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக தங்கப்பந்து விருதை முத்தமிட்டார்.

கழக மட்டத்தில் பல்வேறு பட்டங்களை வென்றுள்ள மெஸ்ஸி, தேசிய அணிக்காக கோபா அமெரிக்கா பட்டம் மட்டுமே வென்றுள்ளார். மெஸ்ஸியின் கிண்ண சேகரிப்பில் பீபா உலக சம்பியன் பட்டம் மட்டுமே வறட்சியாக இருந்தது. தனது நீண்ட நாள் கனவை நேற்று முன்தினம் இரவு நனவாக்கிய மெஸ்ஸி தான் தொடர்ந்தும் ஆர்ஜென்ரீன அணிக்காக ஆடவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இறுதிப் போட்டியில் தனியாளாக போராடிய பிரான்ஸ் வீரர் கிலியன் எம்பாப்பே ஹெட்ரிக் கோல் அடித்து மிரட்டினார். அந்த வகையில், இங்கிலாந்து முன்னாள் வீரர் ஜெஃப் ஹர்ஸ்டுக்கு அடுத்து இறுதிப் போட்டியில் இச்சாதனையை நிகழ்த்திய இரண்டாவது வீரராக ஜொலித்தார்.

தொடரில் மொத்தம் 8 கோல்கள் அடித்து, 'தங்கக் காலணி' (கோல்டன் பூட்) விருதை பிரான்ஸ் வீரர் எம்பாப்பே வென்றார். தனிப்பட்ட வீரராக சாதித்த போதிலும், பிரான்ஸ் அணி வெற்றி பெறாததால், அவரால் அதனைக் கொண்டாட முடியாமல் போனது. விருது வென்ற போதிலும் கூட அவர் சோகத்துடனேயே காணப்பட்டார்.

கட்டார் உலகக்கிண்ணத்தில் அரண் போல் செயற்பட்டு, ஆர்ஜென்ரீனாவை கரை சேர்த்த அந்த அணியின் கோல் கீப்பர் மார்டினெஸ், சிறந்த கோல் கீப்பருக்கான 'தங்கக் கையுறை' (கோல்டன் க்ளோவ்) விருதை வென்றார். மேலும், ஆர்ஜென்ரீனாவின் 21 வயதான இளம் வீரர் என்சோ பெர்னாண்டஸ் சிறந்த இளம் வீரருக்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஆர்ஜென்ரீன அணி சம்பியன் பட்டம் வென்றதுடன், மெஸ்ஸி, மார்டினெஸ் மற்றும் பெர்னாண்டஸ் ஆகிய மூவரும் சிறந்த வீரர்களுக்கான விருது வென்றதை அந்நாட்டு ரசிகர்கள் பெருமிதத்துடன் கொண்டாடி வருகின்றனர்.

### இறுதி நாளின் மொத்த விருதுகள்

சம்பியன் கிண்ணம் - ஆர்ஜென்ரீனா
தொடரின் சிறந்த வீரர் - லியோனல் மெஸ்ஸி
தங்கப் பதக்கம் - லியோனல் மெஸ்ஸி
தங்கப் பந்து - லியோனல் மெஸ்ஸி
தங்கக் காலணி - எம்பாப்பே
தங்கக் கையுறை - மார்டினெஸ்
சிறந்த இளம் வீரர் - என்சோ பெர்னாண்டஸ்

- அனைத்து சுற்றுகளிலும் கோல் அடித்த முதல் வீரராக மெஸ்ஸி சாதனை
- இரண்டாவது முறை தங்கப் பந்து விருதை வென்ற மெஸ்ஸி
- ஹெட்ரிக் கோலுடன் கோல்டன் பூட்டை சோகத்துடன் வென்ற எம்பாப்பே
- அரசர்களுக்கான சிறப்பு உடையை மெஸ்ஸிக்கு அணிவித்து கௌரவித்த கட்டார் மன்னர்
- நான்கில் மூன்று விருதுகளை அள்ளிய ஆர்ஜென்ரீன வீரர்கள்
- 2018இல் சம்பியன் - 2022இல் ரன்னர்ஸ் அப் ஆன பிரான்ஸ்







**மெஸ்ஸியை கௌரவித்த மன்னர்**

சம்பியனான ஆர்ஜென்ரீன அணியின் தலைவர் லியோனல் மெஸ்ஸிக்கு சம்பியன் கிண்ணத்தை கையளிக்கும் முன்னர் கட்டார் மன்னரும் பீபா அமைப்பின் தலைவரும் இணைந்து 'பிஸ்ட்' எனப்படும் அரேபிய பாரம்பரிய உடையொன்றை மெஸ்ஸிக்கு அணிவித்தனர்.

இது உலக அளவில் ரசிகர்கள் மத்தியில் ஈர்ப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், மெஸ்ஸி அணிந்துகொண்ட அந்த உடையின் சிறப்பு மற்றும் அதை யார் யார் அணிந்துகொள்வார்கள் என்ற தகவலும் வெளியாகியுள்ளது. 'பிஸ்ட்' எனப்படும் அரேபிய பாரம்பரிய உடையானது தங்க இழைகளால் உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் கட்டார் உலகக்கிண்ணத்தின் வண்ணத்திலும் அது தைக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி, மகத்தான கௌரவத்தின் அடையாளமாகவும் குறித்த உடை அணியப்படுகிறது.

அரேபிய நாடுகளின் அரசர்கள், உயர் பொறுப்பில் இருக்கும் இமாம்கள், அமீர்கள் உட்பட முதன்மையான நபர்கள் முக்கிய தருணங்களில் இந்த உடையை அணிவதுண்டு. உலகக்கிண்ண கொண்டாட்டங்களின் உத்தியோகபூர்வ நிமிடங்களில் மொத்தமும் லியோனல் மெஸ்ஸி அரசர்களுக்கான அந்த சிறப்பு உடையிலேயே காணப்பட்டார். அது மட்டுமின்றி, குறித்த உடையில் மெஸ்ஸியை காண நேர்ந்த கட்டார் மற்றும் அரேபிய மக்கள் பெருமையுடன் நன்றி தெரிவிக்கவும் பாராட்டவும் செய்துள்ளனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7